

786/92

சாஹெப்

# தர்கா

کونین کی دولت ہے درگاہ اولیاء میں
اللہ کی رحمت ہے درگاہ اولیاء میں
آنے سے یہاں ہم کو ملتا ہے خدا حافظ
کیا جلوۂ قدرت ہے درگاہ اولیاء میں

**ISHQ-E-RASOOL ﷺ IS THE SOUL OF IMAN.**

ரஸூலுல்லாஹ்வை நேசிப்பது ஈமானின் உயிர்.

படிக்க...! நாட்டை நேசிப்பது ஈமானின் அங்கம் பாதுகாக்க...!!


**உருஸ் 19**
**இதழ் 13**

ஜமாதுல் அவ்வல் – 1431
மே – 2010

**நன்கொடை : ரூ. 5/-**
**ஆண்டு சந்தா : ரூ. 50/**


## இதழின் உள்ளே ......


ஜியாரத் பணம் 2
ஏ.ஆரின் நல்ல பழக்கம் 3
தரீகத் ஒரு சிறு குறிப்பு...! 4
பாதுஷா நாயகத்தின் குருநாதருக்கு காணிக்கை... 5
முஹ்யித்தீன் ஆண்டகையின் பிறந்த தினம் 6
புதையல்... 7
மக்காக பதில் கூறலாமா...? 8
மாநபியின் மணிமொழிகள் 9
ஒட்டகனாரின் பாராட்டுகள்! 10
பொள்ளாச்சி ஜமாஅத்துல் சபையில் வஹ்ஹாபிகள் 11
உயிர் நாளங்களில் ஒளலியாக்கள் 12
நூல் ஆசிரியருக்கு பாராட்டு! 13
போட்டி முடிவுகள்...! 14
நாகூராரின் கராமத்துகள்! 16
பாத்திஹாக்களுக்கு நாள் குறித்தல் 17
நாயகத்தின் பெற்றோர்கள் 18
திருமறையின் தெளிவுரை 19
வாசகர் மன்றம்... 20



**Owned and Published by**
M.SYED AHMED, M.A.,
74/176- A, Ist Floor, Ghandiji Road,
opp - Erattai Mastan Dargah,
Thanjavur - 613001
e-mail : dargah_tnj@yahoo.com
www.dargahtnj.blogspot.com
**Printed by**
Manickam Printers,Door No : 999,
South East Rampart,
Thanjavur - 613001

**RNI No. TNTAM/2009/30120**
**Rnp No. SSP/TJ/29/10-12/TJI**
**Posted On 5th day of the Month at Thanjavur H.O.**

அடுத்த வெளியீடு: ஜுலை-2010
Please Visit :
www.aulia-e-hind.com




*நாரயே தக்பீர்!*
*அல்லாஹு அக்பர்!!*

## ஷரீஅத்தும் தரீகத்தும்...!

*நாரயே ரிஸாலத்!*
*யா ரஸூலல்லாஹ்!!*

அல்லாஹ்வின் வேதமான திருகுர்ஆன், ரஸூலுல்லாஹ்வின் பொன்மொழிகளான ஹதீஸ்கள், நம்முன்னோர்களின் மார்க்க தீர்வுகளான இஜ்மாவு, அறிவுச்சிந்தனையான கியாஸ் என்ற அடிப்படை ஆதாரங்களை வைத்து இஸ்லாமிய சட்டமாமேதைகளான இமாம் அபூஹனீஃபா இமாம் ஷாஃபயி இமாம் மாலிகி இமாம் ஹம்பலி போன்ற தன்னிகரற்ற நான்கு இமாம்களும் பகுத்து வகுத்து எடுத்து...

ஃபர்ளு, வாஜிபு, சுன்னத், முஸ்தஹப்பு, ஹலால், முபாஹ், மக்ரூஹ், ஹராம் என்ற சட்டங்களையும் ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஅரிஃபத் என்ற நான்கு படித்தரங்களையும் வழங்கினார்கள்.

ஷரீஅத் சட்டங்களை பேணி நடந்து அதன் உச்சநிலை தாத்பரியத்தை அடையும் போது அதன் இரண்டாம் படித்தரமான தரீகத்தின் முதல் நிலை துவங்குகிறது. எனவே தரீகத் என்பது ஷரீஅத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறையாகும்.

அறிஞர்களால் போற்றப்படும் ஷீராஸ் தேசத்து நாதரான ஷேக் சஅதி ஷீராஜி பெருந்தகையவர்கள்...

شریعت را مقدم دار اول کہ شریعت از طریقت نیست بیروں

ஷரீஅத்தை முதலில் பேணி நடந்துவா தரீகத் என்பது ஷரீஅத்திலிருந்தே தவிர வேறில்லை... என்று தரீகத்தின் முக்கியத்துவத்தையும், ஷரீஅத்தின் எதார்த்தத்தையும் விளக்குகிறார்கள்.

நான் சாட்சி பகர்கிறேன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை என்றும் காருண்ய நபி கண்மணி நாயகம் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் கூட சாட்சி பகர்கிறோம்...

அல்லாவைக் காணாது திருத்தூதரை பார்க்காது அளிக்கப்படும் சாட்சி பொய்சாட்சியல்லவா? பின் எப்படி சாட்சிபகர்வது என்று உள்ளப்பூர்வமாக விளக்கம் அளிப்பதுதான் தரீகத்.

கலிமாவை நாவால் உச்சரிப்பது ஷரீஅத் என்றால் தன்னிலையில் அல்லாஹ்வின்பால் சர்வசதா காலமும் மூழ்கி ஒழுகக் கற்றுத்தருவது தரீகத்.

ஐந்து வேளை தொழுவதும், நோன்பு வைப்பதும், ஜகாத் கொடுப்பதும் ஹஜ் செய்வதும் ஷரீஅத்தின் நடைமுறை கட்டாயக் கடமை என்றால்...

அவ்வமல்கள் அல்லாஹ்வின் திருமுன் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகார அத்தாட்சி கிடைக்கப் பெறும் பாதைக்குப் பெயர் தரீகத்.

நபி மூஸா பத்து கட்டளைகள் கிடைத்தது ஷரீஅத் என்றால் அதைப் பெற வேண்டி தூரே சீனாய் மலையில் நாற்பது நாட்கள் தங்கி தவமிருக்க அல்லாஹ் கட்டளையிட்டது தரீகத்.

நபி மூஸா ஷரீஅத் வழி நடக்க கிழறு நபியை தேடிச் செல்ல அல்லாஹ் உத்தரவிட்டது தரீகத்.

முஸாஃபஹா என்ற கைலாகு கொடுத்தலும், முஆனகா என்ற ஆலிங்கனம் கட்டித் தழுவலும் ஷரீஅத் என்றால்...

முராகபா என்ற இறை தியானத்தில் அமர்தலும், முஷாதஹா என்ற தன்னிலை முழ்குதலும் தரீகத் ஆகும்.

மார்க்க அறிஞர்களான உலமாபெருமக்கள் ஷரீஅத் சட்ட நடைமுறைகளை போதித்து மக்களை நேர்வழி நடத்துகிறார்கள் என்றால் தரீகத்தில் தரிபட பக்குவப்படுத்துகிறார்கள் என்று அர்த்தம்.

நான் என்ற அனானியத்தான ஷைத்தானின் அகந்தை அழிந்து அவன் என்ற ஏகத்துவத்தின் அந்தரங்க மெய்ஞான ரகசியங்களான...

ஆலமுன் நாஸூத், ஆலமுல் மலகூத், ஆலமுல் ஜபரூத், ஆலமுல் பாஹூத், ஆலமுல் ஹாஹூத், என்று படித்தரங்கள் வளர்ந்து தவ்ஹீதின் ஏகனின் சிபாத் வெளிப்பாடான மஸ்ஹரே அதமாகிய ஹகீகத்தே முஹம்மதியா மெய்ஞான ரகசியங்களை தஸவுஃப், ஸுலுக்கு என்ற பாட்டையில் பதம்பிரித்து நடக்கவைப்பது தரீகத் ஆகும்.

அனைத்தும் அவனால் என்ற துவைத சித்தாந்தத்தினை இமாமே ரப்பானி முஜதித் அல்பே ஸானி வஹ்ததுஷ் ஷுஹூத் என்று விளக்குகிறார்கள் என்றால்...

அனைத்தும் அவனே என்ற கோட்பாட்டின் ஹக்கானியத்தை அத்வைதம் என்று வஹ்ததுல் உஜூத் சித்தாந்தவாதிகள் தரீகத்தின் வாயிலாய் நிலைப்படுத்துகிறார்கள்.

இந்த தரீகத்தின் கோட்பாடுதான் இஸ்லாத்தின் அச்சாணி ஆணிவேர் என்பதை அதில் மூழ்கி முத்துக்களாக, பவளங்களாக, மரகதங்களாக, கோமேதகங்களாக மின்னுகின்ற இறை நேசச்

செல்வர்களான வல்லவலிமார்கள் காலங்கள் கடந்தும், கியாமநாள் வரை நிலைகொண்டிருக்கும் அன்னவர்களது தர்காக்கள் தரீகத்தின் உன்னதத்தை பறைசாற்றுகின்றன.

ஷரீஅத்தும், தரீகத்தும் ஓர் நாணயத்தின் இருபக்கங்கள் போல் நிலைபெற்றுள்ளதை சத்தியப் பிரகடனமாக கண்ணாடியை போல் காட்டும் வரலாற்றின் பொன்னான ஒரே ஒரு நிகழ்ச்சியின் உச்சத்தை காண்போம்.

வலிமார்களின் கோமான் மெய்நிலைக் கண்ட ஞானி, வள்ளல் கொதுஸ் ஸமதானி, தீன் தீன் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி தங்கள் மாணவர்கள், முரீதீன்கள், ஆலிம்கள், புடைசூழ நாற்பெரும் இமாம்களின் ஒருவரும் ஷரீஅத் சட்டவல்லுனருமான இமாம் அஹ்மதிபின் ஹம்பல் அவர்களின் தர்காவிற்கு ஹிஜ்ரி ஜியாரத்திற்கு சென்றபோது சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் வஃபாத்ஆகி அடக்கமான இமாம் அவர்கள் கபர் ஷரீபிலிருந்து வெளியே வந்து முஹ்யித்தீன் எஜமானை கட்டித்தழுவி முஆனகா செய்து பொன்னாடைப் போர்த்தி இறைநேசச் செல்வர்களின் தலைவரான முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களே! நான் ஹகீகத் என்ற பேருன்னத பெருவாழ்வில் தங்களைப் பின்பற்றியவனாய் உள்ளேன்.

என்று கூறிய வரலாற்று நிகழ்வு ஷரீஅத்தும், தரீகத்தும் சேர்ந்து தத்தமது தங்கத்தாம்பாள பட்டயத்தில் வைர வைடூரியங்களால் பஹ்ஜதுல் அஸ்ரார் என்ற கிரந்தத்தில் சஹீஹான வரலாறாக பதியப்பட்டுள்ளது.

எனவே தரீகத் என்பது அல்லாஹ்வில் அழிந்து குதிலபில்லாஹ் - இல்லாமல் போகும் நிலை, ஷரீஅத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உன்னத உச்ச நிலையாகும்.

ஆகவே தரீகாவின் பெயரால் இன்றைய இச்சையை உலகில் தவ்ஹீதுவாதிகளின் அதே வஹ்ஹாபிய நச்சுக்கொள்கைகளை மறைத்து எழுதியும் பேசியும் வரும் தேவ்பந் தப்லீகர்களின் போலியான தரீகா பேசுவோரின் வஞ்சகவலையில் வீழாமல் சுன்னத் வல்ஜமாஅத் அகீதா கொள்கையில் ஷரீஅத்துக்கு கட்டுபட்டு தரீகத்தில் தரிபட்டு ஷைகுமார்களின் கரம்பிடித்து தர்கா வலிமார்களின் வழிபாட்டையில் கரை சேர்வோம்.

சிந்திப்போம்! செயல்படுவோம்!! வஸ்ஸலாம்!!!

# வாருங்கள் ஜியாரத் பயணம் செல்வோம்.... காரைக்கால் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ்...!

அவுலியாக்களாகிய இறை நேசர்களுடைய காலடியைப் பற்றிப் பிடிப்பவனுக்கு பயம் எதற்கு? ஏனெனில் நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களோடு இருக்கையில் வெள்ளத்தைப் பற்றிய அச்சம் ஏது? என இமாம் சஅதி அவர்கள் கேட்கிறார்கள்.

மாநபி அண்ணல் எம்பெருமானார் அவர்களின் திருப் பேரராய் இருபத் தேழாவது தலைமுறையில் தோன்றியவர் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் ஆவார்கள்.

### திருத்தோற்றம் :

எல்லா வளங்களும் குறைவற செழிப்புடன் பெருகும் துருக்கிப் பேரரசின் புகழ் பெற்ற நகரமாக புகாரா என்னும் புனிதப் பட்டணம் விளங்கி வந்தது. அத்திரு நகரில் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மரபில் உதித்த செய்யது யாஸீன் அவர்களின் செல்வப் புதல்வர் செய்யது அப்துர் ரவூப் அவர்களுக்கும் செய்யிதத்து ருஃகையா பீவி அவர்களுக்கும் ஹிஜ்ரி 1124ம் ஆண்டு ஷஃபான் மாதம் 19ம் நாள் (கி.பி.1704) செவ்வாய்கிழமை விடியற்காலை சுபுஹு நேரத்தில் என்னுடைய சந்ததிகளில் சிலர் தோன்றுவார்கள் அவர்களது உயர்வு எனக்கு முன்னுள்ள இறைத்தூதர்களுடையதைப் போன்று இருக்கும் என நபி பெருமானார் அவர்கள் கூறிய அருள் வாக்குக்கு ஏற்ப தவப்புதல்வனாய் தோன்றினார்கள். அவரே செய்யது தாவூது மகான் ஆவார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு கபூர் பீவி எனப் பெயரிட்டனர். இவ்விரு நூரையும் சீராட்டி பாராட்டி வளர்த்து வந்தனர்.

### கல்வியும் ஹஜ்ஜும் :

மனவளத்தோடு, உலகியல் அறிவில் தேர்ந்தவர்களான தம் பெற்றோரிடம் 7 வயதில் திருக்குரான் முழுவதையும் தெளிவாகக் கற்று மனனம் செய்து விட்டார்கள். பல்கலைக் கழகம் போல் திகழ்ந்த மதர்ஸயே முஹம்மதியாவில் இபுனு சாவியா என்ற அறிஞரிடம் எல்லாக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தார்கள்.

தம் அன்புத் தங்கைக்கும் மெருவுப் பட்டிணத்தில் செய்யது அப்துல்லாஹ் சாலிமுக்கும் திருமணம் நடந்தேறியது. மகான் அவர்கள் தம் தாய் தந்தையருடன் சிறப்புடன் ஹஜ்ஜை நிறை வேற்றினார்கள்.

புகாராவின் அரசரான அமீர் செய்யது அப்துர் ரஹ்மான் என்பார் செங்கோல் செலுத்தி வந்தார். அரசவையில் முதலமைச்சராக இருந்த வர் மறைவுற்ற காரணத்தால் அவ்விடத் தில் மற்றொருவரை முதல் அமைச்சராக நியமிக்க மன்னர் நாடிய போது, செய்யிது தாவூது அவர்கள் பொருத்தமானவர் களாக இருப்பார் என அறிந்து செய்குல் இஸ்லாமும் குத்பும் தம் குருவுமான ஹஜ்ரத் செய்யிது அப்துல்லாஹ் அலீ என்ற அறிஞரின் அறிவுரைப்படி மகான் அவர்கள் முதல் அமைச்சர் பதவியை அலங்கரித்தார்கள்.

### புகாராவைத் துறத்தல் :

செய்யிது தாவூது அவர்களின் குரு அவர்கள் எனதருமை முரீதே இறைவனின் மிக உயர்ந்த பதவியாகிய ஒலி நிலை முழுமையுற வேறோர் ஞான குருவை நீர் தேடிக் கொள்ள வேண்டும். இன்றோடு என் வாழ் நாள் முடிந்து விட்டது. என்னை நீர் நல்லடக்கம் செய்வீராக! என்று கூறி நல்லுயிர் துறந்தார்கள். தம் குரு பணித்தவாறு அவ்வாறே நல்லடக்கத்தை தாமே செய்து முடித்தார்கள்.

அறிஞர் பெருமக்களும், தம் தந்தையரும் 35 வயதை நெருங்கி விட்டிருந்த செய்யிது தாவூது மகான் அவர்களுக்கு திருமணம் புரிய நாடிய போது இறைநாட்டத்தில் மூழ்கியிருந்தக் காரணத்தால் நயமாக மறுத்து விட்டார்கள்.

செய்குல் இஸ்லாம் குறிப்பிட்ட குரு யாராக இருப்பார் எனத் தவித்தவர்களாக துன்புற்று துவண்டு போய் இருந்தவர்களுக்கு ஞானிகளின் நாயகம் எஜமான் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் கனவின் மூலம் செய்யிது தாவூதே இனி வருந்த வேண்டாம். இதோ இங்கு அமர்ந்திருக்கும் கல்கல் தீவான் உம் ஞானாசிரியராக இனி இருப்பார்! என அறிமுகப்படுத்த, “திருச்சிக்கு வாரும்!” என கல்கல் திவான் அவர்கள் தம் வாழ்விடமும் அறிவிக்கிறார்கள்.

அமைச்சர் பதவியையும், அரண்மனை வாழ்வையும் துறந்து தம்மை ஈன்ற தாய் தந்தையரிடமும், அரசரிடமும், தம் அன்பு தங்கை, மைத்துனரிடமும், உற்றார் உறவினரிடமும் இருந்து விடைபெற்று தமது ஞானாசிரியரைத் தேடி வல்ல நாயனின் நாட்டப்படி புகாரா நகரை விட்டுப் புறப்பட்டார்கள்.

### குருமகானைத் தேடி இந்தியா வருகை:

செய்யிது தாவூது புகாரி வலியுல்லாஹ் அவர்கள் நாடு, நகரம், காடு என பல தடைகளையும் கடந்து சுவாது என்னும் நகரத்தை வந்தடைந்தார்கள். அவ்வூரில் செய்யிது இபுராஹீம் ஆரிபு என்னும் ஓர் அறிஞரும் தமக்கு தக்கதோர் ஞான குருவைத் தேடிக் கொண்டிருப்பதை அறிந்து அவரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு தம் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

### கள்வர்களின் கண் திறந்தது:

காந்தகார் என்னும் அழகிய நகரை வந்தடைந்து ஓரிடத்தில் தங்குகிறார்கள். இஷா தொழுத பின் செய்யிது இபுராஹீம் ஆரிபு கண்ணயர்ந்தார்கள். வலியுல்லாஹ் மட்டும் உறங்காது வல்ல நாயனை எண்ணி திக்ரு செய்த வண்ணம் இருந்தார்கள். அவர்களும் உறங்கட்டும்

என்று காத்திருந்த திருடர்கள் திடீரென கண்ணொளி இழந்து கதறி துடித்தவர்களாக இனி எங்கே போவோம்? எப்படி வாழ்வோம்? எனப் புலம்பினர்.

அவர்களது அலறல் கேட்டு ஊர் மக்கள் கூடிவிட்டனர். என்ன வேலை செய்தீர்கள்!? இப்பெரியாரிடத்திலுமா உங்கள் வேலையைக் காட்டினீர்கள்? மன்னிப்பு வேண்டி கெஞ்சி அழுங்கள். உங்களை மன்னிப்பார்கள் என்றனர். கள்வர்களும் மன்னிப்பு கேட்ட மறுகணம் தம் கண்ணொளியைத் திரும்பப் பெற்று மனம் திருந்தி திருக் கலிமா கூறி இஸ்லாத்தில் இணைந்தனர். அம் மக்களுக்கு அருளாசி வழங்கி, மார்க்கம் விளங்க சொற்பொழிவுகள் ஆற்றி அங்கிருந்து முல்தான் நகரை வந்தடைந்தார்கள்.

அங்கு பட்ட மரங்களும் பசுமையுறலாயின. செடி, கொடி, கனி வர்க்க மரங்களெல்லாம் பூத்து, காய்த்துக் குலுங்கின. சோலையெல்லாம் என்றுமில்லா நறுமணம் கமழ எங்கும் பச்சைப் பசேலென செழுமையைக் கண்ணுற்ற அவ்வூர் மக்களும், நவாபும் வந்திருப்பவர்கள் வலியுல்லாஹ்கள் என்று உணர்ந்து பெரு மகிழ்ச்சிக் கொண்டார்கள். இருப்பினும் தம் தொடர் பயணம் தடைபடா வண்ணம் சிந்து ஹைத்ராபாத்தை வந்தடைந்தார்கள்.

அவ்வூர் அரசனுக்கு ஒரே மகன். புண்பட்ட மேனி, புரையோடிய காயங்கள், கண்கெட்ட முகம், கைகால்கள் முடங்கிய வடிவம் என இத்தனை கொடுமையும் அமைந்த அந்த மைந்தனின் உடலைக் கண்ட வலியுல்லாஹ் இரக்கத்தோடு இருகை ஏந்தி வல்ல நாயனிடம் துஆ கேட்டார்கள். தண்ணீரில் ஓதி குடிக்கவும், மேனியில் தடவவும் பணித்தார்கள். சற்று நேரத்திற் கெல்லாம் அந்த குறைகள் யாவும் நீங்கி புதுப் பொழிவுடன் எழில் உடலோடு அந்த இளைஞன் மிளிர்ந்தான். எல்லோரும் மெய்சிலிர்த்து வலியுல்லாஹ் அவர்களின் ஆற்றலைப் போற்றிப் புகழ்ந்தார்கள். இவ்வாறு சென்றவிட மெல்லாம் சிறப்பெய்தி புகழுடன் தம் அற்புதங்கள் நிகழ்த்திச் சென்றார்கள்.

அடுத்து நாசிக், ஹைத்ராபாத்தில் பைகன் பள்ளி, நாந்தேர் ஆகிய ஊர்களைக் கடந்து தமிழ் நாட்டில் வேலூரில் அமானுல்லாஹ் சாஹிப் என்னும் வணிகர் வீட்டில் தங்கியிருந்தார்கள். அப்போது புகாராவில் தாயாரும், தந்தையாரும் ஒருவருக்குப் பின் ஒருவர் இறையடி சேர்ந்து விட்டதை அறிந்து செய்யிது இபுராஹீம் ஆரிபு அவர்களும் அமானுல்லாஹ் சாஹிபும் பார்த்துக் கொண்டிருக்க சிறுபொழுதில் புகாரா சென்று தம் தாய் தந்தையருக்கு செய்ய வேண்டிய இறுதிக் கடமைகளை நிறைவேற்றி விட்டு திரும்பிய வலியுல்லாஹ் அவர்களின் கராமத் மெய்சிலிர்க்கச் செய்கிறது.

அது மட்டுமின்றி திருமண வீட்டில் காணாமல் போன மணமகளை ஜின்னின் பிடியிலிருந்து விடுவித்துக் காத்தார்கள். பின் வேலூரிலிருந்து கிளம்பி வாணியம்பாடி, சேலம், மாவார் எல்லாம் கடந்து திருச்சிராப் பள்ளி வந்தடைந்தார்கள். குத்புர் ரப்பானி கௌதுல் ஃபர்தானி சுல்தான் செய்யிது நத்ஹர் வலியுல்லாஹ் அவர்களை அதபுடன் புகாரி வலியுல்லாஹ் அவர்கள் ஜியாரத்து செய்துப் புறப்பட்டு ஞானகுருவின் இருப்பிடம் சேர்கிறார்கள்.

## சர்குருவின் சந்திப்பும் காரை வருகையும்:

ஞான வாருதி என ஞானத்தாரால் போற்றப்படுபவரும், மவுனதேசிகர் ஹஜ்ரத் செய்யது கல்கல் திவான் வலியுல்லாஹ் அவர்களிடம் இறைமைக் கல்வியை முறையுடன் கற்றதுடன் பகலெல்லாம் நோன்புடனும் இரவெல்லாம் விழித்திருந்து இறைவணக்கம் புரிவதிலும் தம்மை உயர்த்திக் கொண்டார்கள். ஞான நிலையில் முழு நிறைவு பெற்ற செய்யிது ஷாஹ் இமாம் திவான் மஸ்தான் தாவூத் புகாரி என்ற சிறப்புப் பட்டத்துடன் வலியுல்லாஹ்வின் புகழ் அக்கம் பக்கமெல்லாம் பரவி வந்தது. பொதுவாக வலிமார்கள் கராமத் என்னும் அற்புத செயல்கள் வெளிப்படுவதைக் கொண்டு நாணமுறுவர். இறைவணக்கத்தில் மூழ்கியிருந்த வலியுல்லாஹ் அவர்கள் அப்போது அல்லாஹ்வின் நாட்டப்படி அற்புத செயல்கள் ஆற்றி மக்களின் குறைகளையும் தீர்க்க முடியா - மனித சிந்தனைக்கு அப்பாற்பட்ட பிணிகளையும் - துயரங்களையும் களைந்தார்கள்.

ஹஜ்ரி 1221ம் வருடம் முஹர்ரம் மாதம் பதினோராம் நாள் ஹஜ்ரத் கல்கல் திவான் அவர்கள் வல்ல நாயனின் இறை அழைப்பை ஏற்று இவ்வுலகை நீத்தார்கள். அதன் பின் தாம் மட்டுமே தன்னந்தனியராக திருச்சியிலிருந்து புறப்பட்டு புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர், நாகூர் ஆகிய ஊர்களை எல்லாம் கடந்து தம் 91ம் வயதில் ஹஜ்ரி 1223ல் வல்ல இறையோனின் நாட்டப்படி காரைக்கால் வந்து சேர்ந்தார்கள்.

## காரைக்காலில் நிலைப்படுதல் :

ஹஜ்ரத் செய்யிதினா மஸ்தான் சாஹிப் அவர்கள் காரைக்காட்டில் அமைதியான ஓர் இடத்தில் அறிதுயிலில் ஆழ்ந்திருக்கக் கண்ட ஊர்மக்கள் மிக்க மரியாதையுடன் ஊருக்குள் அழைத்துச் சென்றனர். ஒவ்வொரு நாளும் வலியுல்லாஹ்வின் புகழ் பல ஊர்களுக்கும் பரவியது. 120 வயது நிறைவடைந்த வலியுல்லாஹ் ஹஜ்ரி 1244ல் ஷாபான் பிறை 19ல் 24.02.1829 அன்று தாம் இவ்வுலகை விட்டு இறையுலகை சென்றடைந்தார்கள்.

சாதி மத பேதமின்றி திரு சமாதிக்கு வந்து முறையிடும் மக்களின் மனக் குறைகளை - தேவைகளைத் தீர்த்து வைக்கிறார்கள் ஹஜ்ரத் செய்யிது மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ். ஒவ்வொரு ஆண்டும் சிறப்பான முறையில் கந்தூரி, சந்தனக் கூடு முதலிய புனித வைபவங்களாலும் வலியுல்லாஹ்வின் அருளாலும் அவரை நாடிச் செல்லும் அனைவரும் பயனடைகின்றனர்.

## பயணச் செலவு:

தஞ்சாவூரிலிருந்து காரைக்காலுக்கு நாகை வழி ரயில்களும், நேரடியாக பேருந்துகளும் உள்ளன. ஒரு நபருக்கு ரயிலில் சென்று வர ரூ50/-ம், பேருந்தில் சென்று வர ரூ100-ம்/- ஆகும்.

ஹஜ்ரத் அவர்களின் புனித தர்கா ஜியாரத்திற்கு சென்று வந்து உங்கள் பயண அனுபவங்களை எங்களுக்கு கார்டில் தெரியப் படுத்துங்களேன். வாசகர்களே என்ன அடுத்த ஜியாரத் பயணத்திற்கு தயாராவோமா?

தொகுப்பு: மஹ்பூப்ஜான் முபாரக் -தஞ்சை



கப்ரு ஷரீஃபின் உட்புறத் தோற்றம்.

மஸ்தான் சாஹிப் புகாரா வலியுல்லாஹ் தர்கா ஷரீப் - காரை. (புகைப்பட உதவி : அர்ஷத்-காரை)

## எல்லாவற்றிற்கும் நேரம்!



### ஏ.ஆர்.ரஹ்மானின் நல்ல பழக்கங்கள்!

இசைக்காக நேரம் ஒதுக்குவது போல், ஆன்மிகம், குடும்பத்துக்கும் நேரம் ஒதுக்குகிறேன். என் குடும்பம் எப்போதும் என்னுடன் இருக்க வேண்டும் என நினைக்கிறேன். வாழ்க்கை நிரந்தரம் இல்லை. 43 வயதாகிறது. இனி என்ன செய்ய வேண்டும் என்பதைத் திட்டமிட்டு வருகிறேன். என்ன விரும்புகிறேனோ அதை செவ்வனே செய்ய விரும்புகிறேன். நாளை பற்றி யோசிப்பதில்லை. நல்லவற்றை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துகிறேன் என்றார் ரஹ்மான்.

நன்றி : தினக்கதிர், பக் : 18. 04.04.2010.

அனல் வாஹிதுல் கபீருல் கபீரு பீ ஜாத்திஹி...!

# தரீகத் ஒரு சிறு குறிப்பு...!

## பூவாகி காயாகி கனியாகி பொலிகின்ற பூரணமே முஹ்யித்தீனே போற்றி போற்றி...!

ஆக்கம் : முஹ்யித்தீன் அடிமை. கும்மிடிப்பூண்டி

### தரீகத்தின் படித்தரங்கள் :

இஸ்லாம் என்பது ஒரு ஒப்பற்ற மெய்ஞ்ஞான விருட்சம் - தெய்வீகத் தரு.

அந்த மெய்ஞ்ஞான மரத்தின் நறுமண மலர் தான் ஷரீஅத்.

**ஷரீஅத்** என்ற அந்த புனித மலர் **தரீகத்** என்ற காயாகி, **ஹகீகத்** என்ற கனியாகி, **மஅரிஃபத்** என்ற கனியின் ரசமாகி பின் அந்த ஜீவ ரசத்தை உண்டு நாம் உயர்வு பெற வேண்டும்.

பெரும்பாலானவர்கள் ஷரீஅத் என்ற மலர் மட்டுமே இஸ்லாம் என்று நினைத்து மலரோடு மலராக உதிர்ந்து விடுகிறார்கள். அதற்கு மேல் தரீகத் என்ற காயைப் பற்றியோ, ஹகீகத் என்ற கனியைப் பற்றியோ அந்த அற்புத கனியின் மஅரிஃபத் என்ற இறைநேச அமுதத்தைப் பற்றியோ நினைப்பதும் இல்லை - அப்படி இருப்பதாக எண்ணுவதும் இல்லை. அந்த அகமிய ரசம் தான் அல்லாஹ்வின் லிகா என்ற திவ்விய தரிசனம்.

இது தான் முக்தி - மோட்சம் எல்லாம். இது சொர்க்கத்தை எல்லாம் விட மிக மிக உயர்ந்த ஒப்பற்ற உயர்ந்த பேரின்பம் சொர்க்கம் அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஒன்று. நாம் சொல்லும் மஅரிஃத் சொர்க்கத்திற்குச் சொந்தக்காரனான அல்லாஹ்வையே தரிசிப்பது.

**ஆன்மீகப் பேரரசர் விலாயத் வேந்தர் மெய்ஞ்ஞான ராஜமகுட தவராஜ ராஜர் முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் தங்களுடைய ஸகானில் ஹூப்பு என்ற மெய்ஞ்ஞானக் களஞ்சியத்தில்;**

**ஈடு இணையற்ற இறைநேச அமுதம் நிறைந்த கோப்பைகள் என்னிடம் வந்து கொண்டே இருந்தன – மென்மேலும் வந்து கொண்டே இருந்தன– அந்த அற்புத அகமிய அமுதத்தை நான் போதும் போதும் என்னும் வரை அருந்திக் கொண்டே இருந்தேன். நான் அருந்தி முடித்து விட்டு வைத்தக் கோப்பைகளில் இருந்த மிச்சம் மீதித் துளிகளைத்தான் பிரபஞ்சத்தின் – மனிதர்கள், ஜின்கள் உட்பட – அனைத்து இறைநேசர்களும் சுவைத்தார்கள். ஞானம் பெற்றார்கள் – என்று திருவாய் மலா்ந்தருள்கிறார்கள்.**

ஐவேளை வீட்டிலோ, பள்ளியிலோ தொழுது விட்டு அடுத்து நம் வேலைகளை நாம் பார்த்துக் கொண்டு போனால் போதும் அல்லாஹ் அதற்கு மறுமையில் கூலி கொடுப்பான் அவ்வளவுதான். அதற்கு மேல் அல்லாஹ்வைப் பற்றி நாம் நினைப்பதோ ஏதும் தேவைஇல்லை என்று நினைப்பவர்களை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கண்டிக்கிறார்கள்.

### அல்லாஹ்வின் நேசம் :

அல்லாஹ்வை நேசிப்பது என்பது உண்மையில் அவன் ஏவல் விலக்கல்களின் படி நடந்து அவனுக்கு கீழ்படிவது மட்டும் தான் என்று நினைப்பவர்கள் உண்மையான இஸ்லாத்தை உணராதவர்கள் என்று இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.

இறைவன் தன் திருமறையிலேயே **ஃபஸ்குருனீ அஸ்குருக்கும்** என்னை நீங்கள் நினையுங்கள்! நான் உங்களை நினைக்கிறேன்! என்று அல்லாஹ் சொல்லியுள்ளதைப் பலர் நினைவில் கொள்வதில்லை.

**அவ்வலுத் தீனி மஅரிஃபதுல்லாஹி!**

அல்லாஹ்வை நேசித்து நேசித்து - மென்மேலும் நேசித்து - அவனிலே தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்ளும் மஅரிஃபா என்ற ஆன்மீகம் தான் இஸ்லாத்தின் முதன்மையானது - முதுகெலும்பானது - உயிர்மூச்சானது! என தெளிவுபடுத்துகிறார்கள் திருநபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம்.

இஸ்லாம் என்ற மெய்ஞ்ஞானப் பூங்காவை பாதுகாப்பதற்காகப் போடப் பட்ட பாதுகாப்பு அரணான வேலிதான் ஷரீஅத்!

நபிகள் திலகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொற்காலத்திற்கும், நாதாக்களான நான்கு கலீஃபாக்களும், அருமை பெருமைகளுக்குரிய அஹ்லே பைத்துகளும் வாழ்ந்த புனிதக் காலங்களுக்கும், இறைநேசச் செல்வர்களின் இறைநேச சகாப்பதங்களுக்கும் பின்னால் வந்தவர்களில் சிலர் ஷரீஅத் மட்டுமே இஸ்லாம் என்று நினைத்து விட்டார்கள்.

வேலியை மட்டுமே பலமாகப் பற்றிக்கொண்டு உள்ளே இருக்கும் பாதுகாக்க வேண்டிய ஞானப் பொக்கிஷத்தைப் மறந்து விட்டார்கள்.

### எல்லாமே அல்லாஹ்வுக்காக :

எந்தப் பயணத்திற்கும் ஒரு இலக்கு உண்டு - எந்த மார்க்கத்திற்கும் ஒரு லட்சியம் இருந்தே தீரும். இஸ்லாம் என்ற புனித மார்க்கத்தின் தலையாய உன்னத லட்சியமே அல்லாஹ்தான்.

அல்லாஹ்வை நாம் நேசிக்க வேண்டும் - வழிபட வேண்டும். அந்த வழிபாட்டுக்காக நாம் தேகதிடமாக, தெளிவான உள்ளத்தோடு இருக்க வேண்டும். அதற்காக நாம் நல்லபடி உண்ண வேண்டும். அதற்காக நமக்கு உலகியல் பொருட்கள் - பொருளாதார வசதிகள் வேண்டும். அதற்காக நாம் உழைக்க வேண்டும்.

ஆக, நாம் அல்லாஹ்வை நேசிக்க - வழிபட நமக்கு தேக திடமும், அதற்காக உணவும், உணவுக்காக உலகியல் பொருளாதாரமும் வேண்டும்.

**ஆக அனைத்துமே அல்லாஹ்வுக்காக தான் நமக்கு வேண்டும்.**

இந்த உலகியல் தேவைகளை அவன் அனுமதித்துள்ள ஹலாலான வழியில் பெறவேண்டும். அவன் கட்டளைப் படியே வாழ வேண்டும். இது தான் **ஷரீஅத்.**

ஆக, உலகியல் பொருட்களைத் தேடுவது பொருட்களுக்காக மட்டுமே அல்ல. உணவை உண்பது உணவுக்காக மட்டுமே அல்ல. தேகத்தை வளர்ப்பது - பாதுகாப்பது தேகத்திற்காக மட்டுமே அல்ல - எல்லாமே அல்லாஹ்வுக்காகத் தான்!

இப்படி எல்லாமே அல்லாஹ் விற்காக தான் என்று உணர்வது **தரீகத்.** அந்த உணர்வை உறுதி செய்து கொள்வது **ஹகீகத்.** உணர்வுக்குரிய அல்லாஹ்வின் லிகா என்ற திவ்விய தரிசனத்தை பெறுவது **மஅரிஃத்.**

---

**5 ஆம் பக்க தொடர்ச்சி...**

*... தலைமை காஜியாரும் ஆவார். மேலும் மார்க்க அறிஞர்கள் பலரும் அவர்களின் சீடர்களாய் இருந்தனர்.*

**இவ்விரு சம்பவங்களால் கிடைக்கும் பாடம் :**

*1. கிலாபத் என்பது கடைத்தெரு பொருளல்ல. ஷைகுமார்களுக்கு அல்லாஹ்வால் உத்திரவு கிடைத்து ரஸூலால் வழி மொழியப் பட்டு கல்விப் பட்டணத்தின் நுழைவாயிலான ஹஜ்ரத் அலீ அவர்களால் முத்திரையிடப்பட்டு வலிமார்களின் கோமான் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் கடைக் கண் கடாச்ச உதிப்புக்குப் பின் பற்பல சோதனைகள் செய்து வழங்கப்படுவது தான் கிலாபத்.*

*2. துன்யா தம்மை தேடி வந்த போதும் விரட்டியடித்து செருப்படி கொடுத்து ஷைகின் உத்திரவால் தாமரை இலை நீர் போல் ஒட்டாமலிருப்பது ஞானவான்களான நாதாக்களின் பாதை.*

*3. ஷைகின் உத்திரவின்றி எள்ளின் முனையளவு கூட இவர்கள் நடந்தார்கள் இல்லை என்பது இச்சம்பவங்களின் மூலம் தெரியவருகிறது.*

*பாதுஷா நாயகத்தின் பொருட்டால் அவர்களின் உருஸ் வேளையிலே அவரது குருநாதரின் திரு நாமத்தை தலையில் தாங்கி இறை நாட்டத்தை இறைஞ்சி வேண்டுவோமாக.*

**ஆக்கம் : நாகூர் பக்கிரி**

# நாகூர் ஆண்டகையின் 453 வது கந்தூரியிலே

## நாகூராரின் குருநாதருக்கு தர்கா இதழின் காணிக்கை...

நாகூர் ஆண்டகையின் குருநாதரின் திருப் பெயர் சங்கை மிகு சையதுஸ் ஸாதாத் ஹமீதுத்தீன் என்பதாகும். ஆனால் அவர்கள் சையத் முஹம்மது கவுஸ் குவாலியர் என்ற பெயருடனே புகழ்ந்து விளங்கினார்கள்.

அன்னவரின் முழு வரலாற்றையும் தெரிந்து கொள்வது என்றால் அதற்கான தனிப் பெரும் நூல் எழுத வேண்டும். இச்சிறு கட்டுரையில் அவர்களுடைய குருநாதர் முன்பு நடந்த இரு சம்பவங்களை மட்டும் சுட்டிக் காட்டினால் அந்த ஞானப் பெரு மகனாரின் ஆத்மார்த்த பேரின்ப வாழ்வை எல்லோரும் எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

இவ்வரலாற்றுச் சம்பவங்களை மனாகிபே கவுஸியா என்ற பாரசீக நூலில் இருந்து எடுத்து அஹ்மதாபாத்தைச் சேர்ந்த சையத் மஜ்ருல் ஹக் அவர்களின் முயற்சியால் உருதுவில் 1933ம் ஆண்டு வெளியிட்டதை தர்கா இதழ் வாசகர்களுக்கு தமிழாக்கம் செய்து சமர்பிக்கிறோம்.

இந்த நூலினை பாரசீக மொழியில் யாத்தவர் எஜமான் குவாலியர் ஆண்டகையின் குருக்குல ஞான தவச்சாலையில் புடம் போட்ட தங்கமாய் ஜொலித்த சையத் ஃபஜ்லுல்லாஹ் ஜமீனி என்ற பெரு மகனார் ஆவார். அவர் நூலின் முன்னுரையில் இவ்வாறு குறிக்கின்றார்.

அற்பனும், தாழ்ந்தவனுமாகிய இந்த அடிமை ஹஜ்ரத் கவுஸ் குவாலியர் அவர்களின் தவச்சாலையின் காதிம் ஊழியனாவேன். என் தந்தையின் பெயர் சையத் குத்புத்தீன் இப்னு சையத் வாஹித் இப்னு சையத் அஹ்மதுல்லாஹ். அவர்களின் வமிச நஸப்நாமா தொடர் அற்புத ஜோதி ஆரிஃபு நாயகம் அஹ்மத் கபீர் ரிஃபாயி ஆண்டகை அவர்களைச் சென்றடைகிறது. நான் பல ஆண்டுகள் ஷைகின் பணிவிடை செய்த போது நடந்தவற்றையும், அவர்கள் கூறியவற்றையும் எழுதுகிறேன் என்று கூறுகிறார்கள்.

மேற்கண்ட விளக்கங்கள் ஏனெனில் தர்கா இதழில் வரும் ஒவ்வொரு எழுத்தும் ஆதாரப்பூர்வமாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலாகும். இப்போது மனாகிபே கவுஸியா என்ற நூலில் இருந்து நாகூர் ஆண்டவரின் குருநாதர் வாழ்வில் நடந்த இரண்டு புனித நிகழ்வுகளை இங்கு குறிக்கிறோம்.

### I நாகூர் ஆண்டகையின் குருநாதர் தமது குருநாதரின் சன்னிதானத்தில்:

நான் எனது முர்ஷிதை பிரே ஜமா என்றழைப்பேன். என் முர்ஷிதின் திருநாமம் ஷைகு ஜூஹூர் ஹாஜி ஹூஜூர் என்பதாகும். ஆனால், முர்ஷிதுஸ் ஸகலைன், ஷைகுஸ் ஸகலைன், முஹ்யுஸ்ஸுன்னாஹ், முமைய்யதுல் பித்அதி, குதுபே தாயிருஸ் ஜமான், கஹ்பே தாருல் அமான், இமாதே ஷரீஅத், முபீனே பர்ஜக், பர்ஜகே தரீகத், எகினே ஸிராஜுல் மால்லத்தி வத்தீன், கவுஸுல் இஸ்லாமி வல் முஸ்லிமீன் இவை அனைத்தும் எனது குருநாதருக்கு ஞானவான்களால் வழங்கப்பட்ட பட்டங்கள் ஆகும். குருநாதரின் உத்தரவின் பேரில் சுன்னார்கட் என்ற மலையின் உச்சியிலே மெய்ஞான தவத்தில் தான் அமர்ந்ததைப் பற்றி இப்படி பார்க்கிறார்கள்.

நான் ஐந்தாண்டு காலம் எனது ஷைகு நாயகமாகிய இறைமெய்ஞானி மேன்மை தங்கிய ஷைகு ஜூஹூர் ஹாஜி ஹூஜூர் பிரே ஜஹான் அவர்களின் உத்தரவின் பேரில் மலையின் உச்சியில் அடர்ந்த காட்டின் மூலையில் அமர்ந்திருந்தேன். பகல் 12 மணிக்கு சூரிய உச்சத்தில் கூட வெளிச்சத்தை நான் அங்கு கண்டேன் இல்லை. வனவிலங்குகள் கூட அவ்விடத்திற்கு வர தயங்கி நிற்கும். திடுக்கிடும் பயம் அவ்விடத்தில் எவ்வளவு பெரிய தைரியசாலியாக இருந்தாலும் ஏற்படும். நெருப்பை மூட்டவோ, ஆகாரம் உண்ணவோ முடியாத நிலை. எந்த சூழ்நிலையிலும் எனக்கு எதுவும் நேரவில்லை. எனக்கு எனது ஷைகு நாயகத்தின் உத்தரவு, அல்லாஹ்வின் திருமுன் நிலைபெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தைத் தவிர வேறல்ல. ஐந்தாண்டுகால நிறைவு நிலையில் எப்போதும் போல் பாதின் என்ற தரீகா நிலையில் முழு மூச்சாய் இருந்தபோது மலக்கூத்து ஹாலிலே முதலாம் கலீபாவாகிய அமீருல் முஃமினீன் அபூ பக்கர் சித்தீக் அவர்களும், நான்காம் கலீபாவாகிய சையதினா மௌலா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஜஹு அவர்களும் என் முன் தோன்றி....

நீர் தேர்ச்சியாளர்களில் ஆகிவிட்டீர் இப்போது ரஸூலின் ஷரீஅத் மேற்கொண்டு உலகியலில் ஈடுபடும். உமது காலத்திய கவுஸாக உமக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளீர் என்றார்கள். இதைக் கேட்டு அகமகிழ்ந்து நான் ரஸூலுல்லாஹ்வின் திருமுக தரிசனம் பெற என் மனம் நாடுகிறது என்று கூறியவுடன் இருவரும் இருபுறம் என் கையைப் பிடித்து நபிகள் கோமானின் திருமுன் அழைத்துச் சென்றார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அமுதமொழி கேட்டு பேரின்பப் பேருவகைக் கொண்டு ஷைகின் திருவடி சேர நின்றேன். பின் எலும்பும் தோலுமாக இருந்த நான் மலையிலிருந்து இறங்கப் போகும் செய்தி காட்டுத் தீ போல பல ஊர்களுக்குப் பரவியது.

அங்கே எனது ஷைகான குருநாதர் குரு அருளே நிறையருள் என்ற போதனைக் கேற்ப தமது 160 ஆண்டு கால வயதில் எனக்கு ரஸூலால் கிடைத்த உத்திரவோடு ஷரீஅத் நோக்கி வருவதை அறிந்து எனது குருநாதரே வரவேற்க வந்தபோது நான் எனது ஷைகின் திருமுன் இடிப்பில் துண்டை பட்கா வாக கட்டி, வெற்றுக் காலுடன், கையில் கூஜா தூக்கி, ஒற்றைக் காலில் அடிமை போல் தமது ஷைகிற்கு பணிவிடை செய்ய நின்ற திருக்காட்சியைக் காண அக்கம் பக்கத்து ஊரார்கள் எல்லாம் பற்பல நேர்ச்சைகளுடன் கூடி இரு பெரும் மகான்களின் சன்னிதானத்தில் கந்தூரி வைத்து ஃபாத்திஹா ஓதி ஏழை எளியோருக்கு தானம் செய்த காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும் என்பதாய் ஹஜ்ரத் கவுஸ்குவாலியர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். **நூல் :**

**மனாகிபேகவூஸிய்யா, பக் 26, 27.**

### II துன்யா உலகிற்கு செருப்படி :

மற்றொரு முறை வேறிடத்தில் ஆறு ஆண்டுகள் உண்ணாமல் உரங்கா மலிருந்த என்முன் தங்க வைர நகையணிந்து உலகம் பெண் உருவத்தில் கைகட்டி வந்து நின்றது. நீயார்? என வினவினேன். நான் உலகமாயிருக்கிறேன் என்றது. உனக்கு இங்கு வேலை இல்லை என விரட்டி விட்டேன், நான் உத்திரவு பெற்று வந்துள்ளேன் என்றது உடனே நான் என் மிதியடியை கழட்டி அதன் முகத்தில் எறிந்தேன்.

இரண்டாம் நாளும் இது போன்றே நடந்தது. மூன்றாவது நாள் நான் மதியடியோடு விரட்டிக் கொண்டு சென்றேன். அது என் ஷைகு நாயகத்தின் புனித நிழலில் போய் நின்றுகொண்டது. என்னால் எதுவும் செய்ய இயலவில்லை. அது எனது பீரும் முர்ஷிதுமான ஷைக் நாயகத்திடம் முறையீடு செய்தது.

எனக்கு இறை புறத்திலிருந்து உத்திரவு வந்துள்ளது. தங்களின் கலீபாவான சையத் முஹம்மத் கவுஸ் அவர்களுக்கு பணிவிடை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளேன். இவர் ஏற்க மறுக்கிறார்கள் தாங்கள் தான் முடிவு சொல்ல வேண்டும் என்றது.

என்னை விளித்த ஷைகுனா அவர்கள் இதை ஏற்றுக் கொள்வீர் உமது சந்ததியினருக்கு பயன்படும் என்றார்கள். நான் மவுனியாகினேன்.

**நூல் :மனாகிபே கவூஸிய்யா, பக்: 45**

மேற்கண்ட ஷைகின் வாக்கு பலித்ததை காலம் உண்மையாக்கியது. எஜமானின் திரு கான்காவில் 40 யானைகள் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது. மொகலாய சாம்ராஜ்யத்தின் மைய்ய அமைப்பு என்ற தமது நூலில் 328ம் பக்கத்தில் இப்னு ஹஸன் அவர்கள் மொகலாய சக்ரவர்த்தி அக்பர் பாதுஷா ஒரு கோடி அளவுள்ள ஜாகீர் அக்காலத்திலேயே காணிக்கையாக வழங்கினார் என்று குறிக்கிறார்கள்.

சையதுஸ் ஸாதாத் முஹம்மத் கவுஸ் குவாலியரின் கலீப்பாக்களில் மிகவும் புகழப்படுகின்றவர்கள் தெற்காசிய ஜோதியாம் தமிழகத்து பாதுஷாவாம் நாகூர் ஆண்டவர் என்று அன்போடு அழைக்கப்படுகின்ற சையத் அப்துல் காதர் காதர் வலி நாயகம் அவர்கள் முதன்மை யானவர்களாவார்கள். அதன் பின் ஹஜ்ரத் வஜீஹுத்தீன் குஜராத்தி என்கிற அக்கால....

தொடர்ச்சி 4 ஆம் பக்கம் காண்க...

# பொன்னேரியில் முஹ்யித்தீன் எஜமானின் 959வது பிறந்த தின விழாவும், தர்கா இதழ் புகைப்பட கண்காட்சியும்

சென்ற முறை சென்னையில் இரு இடங்களில் நம் தர்கா இதழ் சார்பாக புகைப்பட கண்காட்சியை கண்ட மக்கள் வெகுவாக பாராட்டியதை எழுதியிருந்தோம். அதை பார்த்த பலர் சென்னையில் பல இடங்களிலும் இதை நடத்தினால் சிறப்பாகவும், மக்கள் பயன் பெறவும் ஏதுவாக இருக்கும் என்ற கருத்தை வலியுறுத்தியிருந்தனர். அவர்களின் துஆ ஆமீனாக ஏற்றுக்கொள்ளப்பட்டது போலும்.

இம்முறை 19.03.2010 வெள்ளிக் கிழமை பெரியவர் ஆலி ஜனாப் ஹாஜி முஹ்யித்தீன் அடிமை அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொன்னேரி காதரியா தவச்சாலையில் மர்ஹூம் ஹசன் வாப்பா காதிரி அவர்கள் குடும்பத்தினர் ஜனாப் அலி பாய், அப்துல் ஹமீது, அபுதாஹிர் நாசர் மற்றும் முஹம்மது ஹுஸைன் பாகவி ஆலிம் ஹஜ்ரத் அவர்களின் பொறுப்பில் எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் பிறந்த தின பெருவிழா ஆங்கில காலண்டர் முறைப்படியும், பதினொன்றாம் பாத்திஹாவும் மிகச் சிறப்பாக பத்திரிக்கை அடித்து வடக்கு கோட்டையார் வ.மு. செய்யது அஹமது அவர்கள் தலைமையில் உலமா பெரு மக்களின் சிறப்பான பயான்கள் ஏற்பாடு செய்திருந்தனர். பாத்திஹா நேர்ச்சை உணவு உபசரிப்பு விருந்து ஏற்பாடுகளை ஆஸ்கார் புகழ் ஏ.ஆர். ரஹ்மானின் தாயார் ஹாஜியானி கரிமா அம்மா காதிரி அவர்கள் செய்து கொடுத்து அவர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பொன்னேரி முஸ்லிம் நகர் ஜமாஅத்தார்கள், சென்னை பாடி முஸ்லிம் ஜமாஅத்தார்கள் என்று பலரும் பங்கேற்றார்கள். தர்கா புகைப்பட கண்காட்சியை கண்டு தத்தமது கருத்துகளை பதிவு செய்தார்கள். அவற்றில் சில உங்களின் பார்வைக்கு...

மெய்யைப் பொய்யாக்கும் கூட்டத்திற்கு கிடைத்த கண்காட்சி. இந்த சம்மட்டி அடி தொடரும் படி செய்யவும்.

**K.T முஹம்மது அலி லெப்பை, பூந்தமல்லி.**

தங்கள் புகைப்படக் கண்காட்சியைக் கண்டதும் என் குடும்பத்துடன் வந்து இக்காட்சியை காண முடிவெடுத்தேன். இக்காட்சிகள் அனைத்தும் என்னை புல்லரிக்க வைத்து விட்டன. இப்படிக்கு உங்கள் உண்மையுள்ள சுன்னத் வல் ஜமாஅத்தில் வெற்றியுடன் பீடுநடை போடும் உங்களில் ஒருவன்.

**M.முனாவர்தீன் @ ரபீக்தீன், ஆனைமலை.**

19.03.2010 அன்று தர்கா கண்காட்சியில் புகைப்படங்களை பார்த்து வியந்தேன். காரணம் பார்க்க முடியாத தர்காக்களின் புகைப்படங்களை நேரில் சென்று பார்த்தது போல் உள்ளம் மகிழ்ந்தது.

**M.A.முஹம்மது தமீமுல் அன்சாரி, பொன்னேரி.**

காணக்கிடைக்காத கண்காட்சியைக் காண உதவிய தர்கா பத்திரிக்கை ஆசிரியர் அவர்களுக்கு நன்றிகள் பல.

**S.ஷாஹுல் ஹமீது. பழவேற்காடு.**

அஸ்ஸலாமு அலைக்கும்.... இது வரை எங்கள் கண்களுக்கு எட்டாத வலிமார்களின் தர்காக்களை காணுகின்ற பாக்கியத்தை தந்ததற்கு மிகவும் நன்றி.

நாங்கள் நினைக்காத ரஸுலுல்லாஹ்வின் வீட்டையும், அவர்களின் அற்புத புனித மிக்க காலடி தளத்தையும் பார்த்த மனம் குளிர்ந்தது. இந்த கண்காட்சியை கும்மிடிப்பூண்டி ஜாமிஆ மஸ்ஜிதிலும் வைப்பதற்கு ஆசை கொள்கிறோம். வஸ்ஸலாம்.

**A.ரஷீத், M.ஷேக், S.அஜ்மல்கான், J.அசாருத்தீன். கும்மிடிப்பூண்டி.**

இந்த கண்காட்சியில் வைக்கப்பட்ட அனைத்தும் அபூர்வ மானவை. யாரிடமும் கொடுக்காமல் பாதுகாக்க வேண்டுகிறேன். தர்கா இல்லையென்று சொல்லும் அனைவரும் ஷைத்தானின் பிள்ளைகள். அவர்களை எங்கு வேண்டுமானாலும் சந்திக்க நான் தயார். மேலும் பல இஸ்லாமிய பொருட்களை சேமிக்க இன்டெர்நெட்டிலிருந்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

**சலீம் (எ) மு.முகம்மது காசிம்.**

**A.Akram Khan,(IJP),M.Thanveer Ahmed, Abdul Malick Rabbani, சென்னை -23,**

நாங்க இந்து. இது வரை பார்க்காத அனைத்து தர்காக்களையும் பார்த்தேன். பாம்பே தர்கா அழகாக இருக்கிறது. இதே போல் அனைவருக்கும் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த கண்காட்சியை வாப்பா வீட்டில் ஏற்பாடு செய்ததற்கு நன்றி.

**V.விஜயகுமாரி, வலத்தரவாக்கம்.**

தெள்ளத் தெளிவாக எகிப்து, துருக்கி, ஈராக், துபாய் போன்ற உலக நாடுகளில் உள்ள தர்காக்களை புகைப்படம் மூலம் பார்ப்பதற்கு ஒரு அருமையான நல்ல சந்தர்ப்பத்தை பொது மக்களுக்கு ஏற்பாடு செய்தமைக்கும், மேலும் இந்த காட்சிகளை அருமையான சி.டிக்களில் மூலம் தெரியப்படுத்தினால் இன்னும் நன்றாக காணாத ஊர்மக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் அறிந்தும், தெரிந்தும், புரிந்தும் அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற எண்ணமும் உருவாகும். அல்லாஹ் போதுமானவன். வஸ்ஸலாம்.

**A.அஷ்ரப், சென்னை - 8.**

இறைவன் மிகப்பெரியவன். இறையின் இனிய நபி வழி வந்த வலிமார்களின் இருப்பிடம், அவர்கள் ரவ்ளா ஷரீஃப் காணக் கிடைக்க மாபெரும் பொக்கிஷக் காட்சி. என் மனதை மிக நெகிழ வைத்துவிட்டது. இது மக்கள் அனைவருக்கும் மிக பிரயோஜனமாகவும், மனநிறைவாகவும் இருக்கும் என மனநிறைவுகொள்கிறேன்.

**A.S.அப்துர் ரஹ்மான் வில்லிவாக்கம் - சென்னை-49**

தர்கா புகைப்பட கண்காட்சி அமைக்க இடம் கொடுத்து சிறப்பாக ஏற்பாடு செய்துதந்த வாப்பா குடும்பத்தினருக்கும், ஆலிம்களுக்கும், முஸ்லிம் நகர ஜமாஅத்தார்களுக்கும் தர்கா இதழ் தமது மனமார்ந்த நன்றிகளை உரித்தாகுகின்றது.

# தஞ்சை இரட்டை மஸ்தான் தர்கா கந்தூரி விழா

தஞ்சை நகரத்தின் இதயப் பகுதியில் சிறப்புற்று விளங்கும் ஆலே நபி அவுலாதே அலி இரட்டை மஸ்தான் தர்காவின் கந்தூரி மஹோர்சவ விழா வழக்கம் போல் பாரம்பரியமிக்க ஆசார் ஷரீஃப் தைக்காலில் 29.03.2010 மக்ரிப் தொழுகைக்குப் பின் 1431 ஹிஜ்ரி ரபீயுல் ஆகிர் பிறை 12 திங்கள்கிழமை ரிபாயி ஜமா சர்குரு மௌலானா ஷா அவர்கள் பகீர்மார்களின் மேன்மை மிக்க ராத்தீபு நிகழ்ச்சியும், இந்தியா எங்கள் தாய் நாடு இஸ்லாம் எங்கள் வழிபாடு, அன்பர்களே...! நண்பர்களே...! கொஞ்சம் நில்லுங்கள்...! ஈராக் அதிபர் சதாம் ஹுஸைனின் சரிதம் கேளுங்கள்...! என்ற சமூக எழுச்சி மிக்க பாடல்களும், ஹு ஹு ஹுவே நீ அல்லாஹ்...! ஜாஹே ஜமாலுல் லாஹ்...! சிஃபத்தே ரஸுலுல்லாஹ்...! என்ற ஆன்மீக பாடல்களும் கொட்டடித்துப் பாடியது பரவசமாய் இருந்தது. இஷாவுக்குப் பின் ஃபாத்திஹா தஅவத் விருந்து நடைபெற்றது.

இரவு 10மணிக்கு மேல் ரிஃபாயி, மண்டல், பான்வா பக்கீர்மார்கள் புடைசூழ தைக்காலிலிருந்து புறப்பட்டு ஷாமியான் தைக்காலில் சந்தனம் பூசி அங்கிருந்து இரட்டை மஸ்தான் தர்காவில் சந்தனம் பூசி ஹஜ்ரத் மார்கள் தர்கயே கிலாபத் ஷஜ்ரா ஷரீஃப் பட்டியல் படிக்கப்பட்டு அழகிய முறையில் தர்கா பாரம்பரிய சஜ்ஜாதா நிஷீன் சங்கை மிகு சையத் ஷாஹ் நிஃமதுல்லாஹ் சக்காப் தாஜீம் தரக் காதிரி ஷுத்தாரி என்கிற சையத் முயீன் அஹ்மத் சக்காப் அவர்கள் துஆ செய்தார்கள். ஐச்சா பீவீ ஒத்தை மஸ்தான் தர்கா வலிமார்களுக்கும் அது போது சந்தனம் பூசி ஃபாத்திஹா ஓதப்பட்டது.

எல்லா தரப்பு மக்களும் ஜாதி மத பேதமின்றி மகான்களின் மீது பக்தி கொண்டு திரளாக வந்து கலந்து கொண்டார்கள். கொடியேற்றம் மற்றும் உருஸ் ஏற்பாடுகளை சையத் ஷாஹ் ஷாஹ் தோஸ்த் முஹம்மத் சக்காப் என்கிற சையத் மத்தீன் அஹ்மத் சக்காப் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

## புதையல்...7 தப்லீக் வஹ்ஹாபிகள் தமிழகத்தில் நுழைந்த கதை...

இன்று தவ்ஹீது வாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் வஹ்ஹாபிகள் பகிரங்கமாக அல்லாஹ்வின் மீதும் அவன் ரஸூலின் மீதும் அவுலியாக்களின் மீதும் வைக்கும் தரக்குறைவான விமர்சனங்களையும், தங்களின் தப்புத் தப்பான மார்க்க சட்டங்களையும் உள்ளே மறைத்துக் கொண்டு மெல்ல மெல்ல வஹ்ஹாபிய கொள்கைகளுடன் தேவ்பந்து மதரஸாவின் ஆதரவோடு அதே வஹ்ஹாபிய நச்சுக் கருத்துக்களை தமிழகத்தின் உள்ளே நுழைக்க நெற்றியில் கருப்பும், கையில் தஸ்பியும், மழித்த மீசையும், நீண்ட தாடியும், அதைவிட நீண்ட ஜிப்பாவும் போட்ட தப்லீகர்கள் முயன்ற போது அவர்களை நம் தமிழகத்து சுன்னத் ஜமா அத்தின் அன்றைய சங்கை மிகு உலமாக்கள் எப்படி தடுத்தனர் என்பதை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு துவக்கப்பட்டதுதான் இந்த புதையல் பகுதி.

## பாங்குக்கு (அதான்) முன் ஸலவாத்து சொல்லுவதை தடை செய்யும் தீவிர முயற்சியும், தமிழ் மாநில அரசு தலைமை காஜியாரின் மார்க்க தீர்ப்பும். 1984ல் வெளிவந்த பத்வா

நம் உயிரினும் மேலான நபிகள் நாயகத்தின் மீது ஸலவாத்து சொல்வதை எந்த ஒரு முஸ்லிமும் தடுக்க துணியமாட்டார். ஸலவாத்தின் மேன்மைகள் ஹதீது, பிக்ஹு கிரந்தங்களில் நிரம்பியுள்ளன.

திருக்குர்ஆனிலேயே ஈருலக ரட்ஷகர் கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து கூறும் படி அல்லாஹு தஆலா ஈமான் கொண்டவர்களை ஏவுகிறான்.

இந்த ஆயத்திலேயே ஸலவாத்து என்ற சொல் அடக்கமாகி இருப்பதால் ஸலவாத்தை மருப்பவர்கள் இறை கட்டளையை மறுத்த காபிராகிவிடுகிறார்கள்.

இதைக் கொண்டு நாம் தெளிவடைய வேண்டிய விஷயம் என்னவென்றால் ஸலவாத்து ஓதுவதை தடுப்பது எந்த அபாயத்தை நோக்கி செலுத்துகிறது என்றால் ஸலவாத்தை தடுப்பவன் காபிராகி விடுகிறான்.

ஸலவாத்து ஓதுவது சட்டமா மேதைகளான இமாம்களிடம் வணக்க வழிபாடுகளில் இபாதத்தாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எந்த ஒரு நற்காரியத்தையும் துவக்கும் அல்லாஹ்வைப் புகழ்ந்து துதித்த பின் கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பேரில் ஸலவாத்தை எத்தி வைப்பது இறையருளையும், பரக்கத்தையும் பெற அடிப்படை காரணமாக அமைகிறது.

இப்படிப்பட்ட நன்மையான அமலை தடுக்க முற்காலத்தில் எவரும் முற்பட்டதை நாம் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் இன்றைய காலத்தில் பாங்கு சொல்லும் முன் ஸலவாத்து சொல்வதை இவர் முஸ்லிம் என்று சொல்லிக் கொண்டு தடுக்க துணிந்துவிட்டார்.

மேற்கண்ட நிகழ்வுகள் சமீப காலமாக அதிலும் குறிப்பாக தப்லீக்காரர்கள் வாழும் பகுதியில் நடந்தேறியுள்ளன. மோதினார் (பிலால்) அவர்களை ஸலவாத்து சொல்வதை தடைசெய்துள்ளார்கள்.

இப்படி ஸலவாத்தை தடுக்கும் விஷமத்தைச் செய்த நபர் தன்னை ஒரு மௌலானா, மௌலவி, ஹாபிஸ், காரி, முப்தி என்று சொல்லிக்கொள்பவர். பெங்களூரில் உள்ள ஒரு வஹ்ஹாபிய தப்லீக் மதராஸவில் பயின்றவர். சென்னையில் ஒரு பள்ளியில் பேஷ் இமாமாக இருப்பவர்.

இதனைத் தொடர்ந்து நீண்ட விவாதங்கள் சர்ச்சைகள் ஏற்பட்டு குழப்பம் நீடிக்கவே தமிழக அரசு தலைமை காஜியார் அவர்களை அணுகி தீர்வு வேண்டிய போது அவர்கள் கையெப்பமிட்ட பத்வா வழங்கியுள்ளார்கள்.

அன்றைய தமிழக தலைமை காஜியான மௌலான மௌலவி அல்ஹாஜ் அஜீஜுத்தீன் அவர்களிடம் பாங்கு சொல்வதற்கு முன் ஸலவாத்து கூறலாமா என்ற கேள்விக்கு அவர்கள் கொடுத்த பத்வா 10.04.1984ல் பிரபல உருது தினசரியான முஸல்மான் பத்திரிக்கையில் வெளிவந்துள்ளது.



முப்தி காஜி அஜீஜுத்தீன் சாஹிப் 1984ல் கொடுத்த புகழ் பெற்ற பத்வா.

அந்த பத்வாவின் விளக்கம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** வழக்கமாக ஐவேளை தொழுகைக்கு முன் ஸலவாத்துக்குப் பின் பாங்கு சொல்லப்படுகிறது. அவ்வாறு ஸலவாத்து கூறுவது கூடுமா? அவ்வாறு கூறுவதை தடுப்பவரைப் பற்றி மார்க்கம் என்ன தீர்ப்பு கூறுகிறது.

**ஹாஜி ஸலாஹுத்தீன்,**
**சென்னை.**

**பதில் :** இறை துதிக்கும், ஸலவாத்துன் நபிக்குப் பின்னும் கேள்விக்கான பதிலாக....

பாங்கு மற்றும் இகாமத்துக்கு முன் ஸலவாத்து ஓதுவது (முஸ்தஹஸன்) ஒரு அழகிய நற்காரியமாகும். காஜி கியாழ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தன்னுடைய பத்வா (மார்க்க) கிதாபில் ஸலவாத்து ஓதுவது ஆகுமானதே என ஊர்ஜிதம் செய்துள்ளார்கள். முல்லா மஹர் ஷாமி ஹனஃபி அவர்கள் (முஸ்தஹப்) பேணப்பட வேண்டியது என விளக்கமளித்துள்ளார்கள்.

ரத்துல் முக்தார் என்ற கிரந்தத்திலும் (முஸ்தஹப்பு) பேணப்பட வேண்டியது என பதியப்பட்டுள்ளது.

இமாம் இப்னு ஹஜர் மக்கி ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் துர்ரே மன்சூர் கிரந்தத்தில் ஒவ்வொறு நற்காரியத்திற்கு முன்னும் ஹம்து - ஸலவாத்து ஓதுவது முஸ்தஹப் என வரைந்துள்ளார்கள்.

அதன்படி பாங்கு இகாமத்துக்கு முன் ஸலவாத்து ஓதுவது முஸ்தஹப் ஆகும். மேலும் துர்ரே மன்சூர் கிரந்தத்தில் ஒரு ஹதீஸ் பதியப்பட்டுள்ளது. எந்த ஒரு நற்காரியமும் அல்லாஹ்வின் திருப்பெயருடனும், என் மீது ஸலவாத்தும் இன்றி ஆரம்பிக்கப்படுகிறதோ அது முழுமையடையாது - ஜெயம் பெறாது.

தான் செய்யும் காரியமான ஸலவாத்து ஓதுதலை ஈமான் கொண்ட மக்களையும் ஓதும்படி அல்லாஹ்வே திருக்குர்ஆனில் ஏவுவது ஸலவாத்தின் மகிமையை அனைவருக்கும் உணர்த்துகிறது.

**முடிவுரை:**

மேற்கண்ட தெளிவுகளின்படி பாங்கிற்கும் இகாமத்திற்கும் முன் ஸலவாத்து ஓதுவது ஆகுமானதே. பித்அத் அல்ல. என்பது தெரியவருகிறது.

யாதொரு பள்ளியிலும் பாங்கிற்கும் இகாமத்திற்கும் முன் ஸலவாத்து ஓதுவது ஆகுமானது. எனவே அதை தடுப்பது பாவச்செயல் ஆகும். ஏனெனில் ஸலவத்து ஓதுதல் வணக்க வழிபாடான இபாதத் ஆகும்.

ஒப்பம் முப்தி காஜி அஜீஜுத்தீன்
10.04.1984

## இலங்கை மார்க்க அறிஞர் தமிழகம் வருகை

முபாரக்பூர் அஷ்ரபியாவில் கல்வி கற்றுத் தேர்ந்தவரும் தமிழக சூஃபி ஹஜ்ரத் அவர்களின் பைஅத்துப் பெற்றவரும் சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கை பிடிப்போடு, வஹ்ஹாபிகளின் எவ்வித சமரசத்திற்கும் உடன்படாமல், 1980களில் வெளிவந்து கொண்டிருந்த வஸீலா பத்திரிக்கையின் ஆசிரியராகவும் திகழ்ந்த **மௌலானா மௌலவி ஏ.எல்.பத்ருத்தீன் பாகவி அஷ்ரபி காதிரி சூஃபி** அவர்கள் தமிழகம் வருகை புரிந்து நாகூர் தஞ்சை போன்ற ஊர்களில் சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கைக்கு ஆதாரமாக சிறப்பாக சொற்பொழிவு ஆற்றினார்கள்.

தற்போது ஹஜ்ரத் அவர்கள் **புஷ்ரா நற்செய்தி** என்ற மாத இதழை இலங்கயில் வெற்றிகரமாக வெளியீடு செய்து வருகிறார்கள். தேவையானோர் தர்கா இதழ் விலாசத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

# புதையல்...8 மக்காப் பள்ளி இமாமே மக்காகப் பதில் கூறலாமா?

**வஹ்ஹாபிகள், பள்ளிவாசல் நிர்வாகங்களில், இயக்கங்களில் மற்றும் பல இஸ்லாமி உள்ளூர் ஜமாஅத்துக்களில் நூழைந்து தலைமைத்தனத்தைப் பிடித்து, இமாமத்தில் புகுந்து அல்லாஹ், ரஸூல் அவுலியாக்கள் விஷயத்தில் கீழ்தரமான கருத்துக்களை மக்கள் மனதில் பதியவைத்து தூய இஸ்லாமிய சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளை சிதைக்கும் புத்தியைக் கொண்டவர்கள் என்பது இந்த மக்கா மஸ்ஜித் வஹ்ஹாபிய இமாம் விஷயம் ஒரு உதாரணமாக இருக்கிறது. பள்ளிவாசல் நிர்வாகிகள் விளித்துக்கொள்வார்களா?**

சென்னை அண்ணா சாலையிலுள்ள மக்கா மஸ்ஜிதின் இமாம் மவ்லவி ஷம்சுத்தீன் காசிமி அவர்களின் கவனத்திற்கு, ஒரு திறந்த மடல்!

சில வருடங்களுக்கு முன் புனித ரமளான் ஸஹர் நேரத்தில் தமிழன் தொலைக் காட்சி மூலம் நேயர்களின் கேள்விகளுக்கு நீவிர் பதில் கூறி வந்தீர். அந்த வரிசையில் பிறை 28ம் நாள் எங்கள் ஊராகிய வழுத்தூரிலிருந்து ஒருவர் கேட்ட கேள்விக்கு நீவிர் அளித்த பதில் - அந்த பதிலை தொலைக் காட்சி மூலம் செவியுற்ற சுன்னத் வல் ஜமாஅத்தினர் அனைவரின் ஈமான் மீதும் ஈட்டியைப் பாய்ச்சியது போலிருந்தது.

ஜும்ஆ தொழுகைக்குப்பின் யா நபி! பைத்து ஓதுவது ஆகுமா? என்ற கேள்விக்கு நீவிர் கூறிய பதிலில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை முன்னிலையாக்கி யா நபி! யா ரஸூலல்லாஹ்! என்று அழைப்பதே ஷிர்க் என்று, சித்தபிரமை பிடித்தவர் போன்று, சினம் கொண்டு பதில் கூறினீர். புனித மதீனாவிலுள்ள ரவ்ளா ஷரீஃபுக்கு முன் நிற்கும்போது மட்டும் போது தான் யா ரஸூலல்லாஹ்! என்று முன்னிலை வாக்கியத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை அழைத்து ஸலாம் சொல்வது ஆகும் என்றும், நமது ஊர்களிலிருந்தெல்லாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை யா ரஸூலல்லாஹ்! என்று முன்னிலை வாக்கியத்தில் அழைத்து ஸலாம் கூறுவது ஷிர்க் என்றும், நீவிர் கூறிய பதில் - உண்மையென்றால், இத்தகைய முறையில் ஸலாம் கூறும் நல்வாய்ப்பு, பணவசதி படைத்தவர்களுக்கு மட்டும் தானே கிடைக்கும்? அவ்வாறாயின் ஸலவாத்தும், ஸலாமும் ஜக்காத்தையும், ஹஜ்ஜையும் போன்று பணக்காரர்களுக்கு மட்டும் உரிய அமலா?

யா ரஸூலல்லலாஹ்!என்றாலும் யா அய்யுஹன் னபிய்யு! என்றாலும் இரண்டுமே நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை முன்னிலைப்படுத்தி நேரடியாக அழைக்கும் வாசகம் தானே! அல்லாஹ்வை நேரிடியாக முன்னிலைப்படுத்தி வணங்கும் தொழுகையில் கூட, நபியவர்களே! என்று முன்னிலைப்படுத்தி நேரடி ஸலாம் சொல்ல நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், மார்க்கவிதி முறை ஏற்படுத்தியிருக்கும்போது - தொழுகைக்கு வெளியே இறை தூதர் அவர்களே! என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை நேரடியாக முன்னிலைப்படுத்தி ஸலாம் கூறுவது ஷிர்க் என்றுரைப்பது எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்! எத்துணை கொடிய அபத்தம்! ஒரு மக்தபு சிறுவனுக்குக் கூட, தெரிந்த இந்த உண்மையை மக்கா மஸ்ஜிது இமாமாகிய நீவிர் தெரிந்து கொள்ளாத அளவுக்கு மக்காகி விட்டீரா?

ஹஜ்ரத் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பின் படியுள்ள அத்தஹிய்யாத் வாசகங்களை, இமாம் அபூ ஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும், ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பின் படியுள்ள அத்தஹிய்யாத் வாசகங்களை - இமாம் ஷாஃபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும், தேர்வு செய்த நிலையில் - இவ்விரண்டு மத்ஹபினரும் ஓதி வரும் அத்தஹிய்யாத்திலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை, நேரடியாக முன்னிலைப்படுத்தி ஸலாம் கூறும் அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு என்ற வாசகம்தானே இடம் பெற்றுள்ளது. இவ்வாறு இரு மத்ஹபுகளையே மட்டந்தட்டும் வடிகட்டிய வஹ்ஹாபி ஆனது எப்போது? இத்தகைய நிலையில் மக்கா மஸ்ஜித் எனும்- சுன்னத் வல் ஜமாஅத் பள்ளியில் இமாமாகப் பணியாற்றுவது எந்த வகையில் நியாயம்?

மண்ணறையில் வைக்கப்பட்ட மைய்யித்திடம் மலக்குகள் இருவர் வந்து, இந்த மாமனிதரின் விஷயத்தில் நீ என்ன கூறியிருந்தாய்? - என்ற பொருளில் மாகுன்த தகூலு ஃபீ ஹாதர் ரஜ்லி? என்று கேட்பதாக - நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்களே! ஹஜ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்ததாக - ஸஹீஹுல் புகாரியும், முஸ்லிமும் தகவல் தரும் இந்த ஹதீஸிற்கு - மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மண்ணறையில் ஹாழிர் ஆவதால்தான் இந்த மாமனிதர் என்ற சுட்டிக்காட்டுச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதென - ஹதீஸுக்கலை வல்லுனர்கள் விளக்கமளித்துள்ளனர். ஆறடி நீளமும், இரண்டடி அகலமும் உள்ள குறுகிய மண்ணறையிலேயே நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹாழிர் ஆகும்போது பள்ளிவாசல் போன்ற பரந்துவிரிந்த புனித இடங்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹாழிர் ஆவதாக நம்புவது ஷிர்க் என்றுரைக்கும் உமது வாதம், எத்துணை கொடிய அபவாதம்!

ஷிர்க் எனும் சொல்லை, இவ்வாறு இடம் தெரியாமல் பயன்படுத்தும்போது ஏற்படும் இடற்பாடும் விளைவும் உமக்குத் தெரியாதா? இதோ-இந்நிலையை விளக்கிட - உம்மிடம் ஒரே ஒரு கேள்வியை முன்வைக்கிறோம். அதாவது உம்முடைய தந்தையோ அல்லது தாயோ - அஸ்ஸலாமு அலைக்க யா ரஸூலல்லாஹ்! என்று நிச்சயம் சொல்லியிருப்பார்கள். ஏனென்றால் இவ்வாறு சொல்வது ஷிர்க், என்று கூறும் உமது வாதம் அவர்களுக்கெல்லாம் எட்டியிருக்காது. எனவே, இவ்வாறு கூறியதால் உமது வாதப்படி - முஷ்ரிக் ஆகிவிட்ட உமது தந்தைக்கும் முஷ்ரிக் ஆகாத உமது தாய்க்கும் ; அல்லது முஷ்ரிக் ஆகாத உமது தந்தைக்கும் முஷ்ரிக் ஆகிவிட்ட உமது தாய்க்கும் பிறந்த உமது பிறப்பின் நிலைமை எத்தகையதாக அமையும்? என்பதை சிந்தித்துப் பாரும்!

உம்மைப்போன்ற, உண்மை யுணராதவர்களின் உளறல்களிலிருந்து, இந்த சமுதாயத்தை அல்லாஹ் பாதுகாப்பானாக!

இப்படிக்கு,

**மவ்லவி A.ஜாஃபர் சாதிக் நூரி,**

இமாம் ஜும்ஆ பள்ளிவாசல்,

மெயின்ரோடு - **வழுத்தூர்.**

## ஸ்ரீமுஷ்ணத்தில் சந்தன சாத்து விழா

ஸ்ரீமுஷ்ணம் பள்ளிவாசலுக்கு அருகில் அடக்கமாகி இருக்கும் ஹஜ்ரத் நாஸர்கான் அவுலியா அவர்களின் சந்தன சாத்து விழா ஹிஜ்ரி 1431 ரபீயுல் ஆகிர் பிறை 11க்கு 28.03.2010 ஞாயிற்றுக் கிழமை முதல் நாள் மௌலூது ஷரீஃப் ஓதி கொடியயேற்ற விழாவும் 29.03.2010 இரவு 9மணிக்கு இன்னிசை முரசு நாகூர் ஜகரிய்யா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் 30.03.2010 அதிகாலை ஃபஜ்ருக்கு முன் வலியுல்லாஹ் அவர்களின் மஜார் ஷரீஃபுக்கு சந்தனம் சாத்தி ஃபாத்திஹா ஓதி தபர்ருக் வழங்கப்பட்டது. அன்று மாலை 6 மணிக்கு சிராகான் என்ற விளக்கேற்ற நிகழ்ச்சியும் நடைபெற்றது.

ஜாதி, மத வேறுபாடின்றி எல்லா சமூக மக்களும் திரளாக கலந்து கொண்டு அல்லாஹ்வின் நேசரான வலியுல்லாஹ் அவர்களின் துஆ பரக்கத்தை பெற்றுச் சென்றார்கள்.

கந்தூரிக்கான அனைத்து ஏற்பாடுகளையும், ஸ்ரீமுஷ்ணம் அபூபக்கர் நவாப் ஜாமிஆ மஸ்ஜித் சுன்னத் வல் ஜமாஅத்தார்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



# احاديث النبي صلى الله عليه وآله وسلم

## மாநபியின் மணிமொழிகள்

சிஹாசித்தா



### சஹீ ஹதீஸும் - புகாரி ஷரீஃப் ஓர் சிறு குறிப்பு :

நாம் இது வரை ஹதீஸ்கள் என்றால் என்ன அவைகளை ஹதீஸ்கலை வல்லுநர்களான முஹத்திஸீன்கள் எத்தனை வகைகளாகப் பிரிக்கின்றனர். அந்த தரம் பிரிக்கப்பட்ட ஹதீஸ்களின் விளக்க வியாக்கானம் என்ன என்று எழுதி அதன் முதல் வகையான ஹதீஸே குத்ஸி என்ற வகையை எடுத்துக் கொண்டு அதன் விளக்கத்தையும் அதற்கு உதாரணங்களாக நான்கு ஹதீஸ்களை எடுத்துக் காட்டி அதிகாலை வேளையில் அவுலியாக்களின் உருஸ்கள் நடத்தப்படுவதும், சந்தனம் பூசுவதும், ஷைகுமார்களால் கொடுக்கப்படும் ஷிஜ்ரா ஷரீஃபுகள் ஓதப்படுவதும் ஆதாரப்பூர்வமாக கூறி நிரூபித்தோம்.

இப்போது ஹதீஸே சஹீ என்றால் என்ன? அதற்கு முஹத்திஸீன்களான ஹதீஸ்கலை வல்லுநர்கள் எப்படி பகுத்தறிந்து உரிய அந்தஸ்தை வழங்குகிறார்கள் என்று சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

### ஹதீஸே ஸஹீஹ் :

இந்த ஹதீஸ் களில் கூறுப்படும் வாசகமும், அதைக் கூறும் பெயர்பட்டியல்களில் கூறப்படுவோரின் எவர் மீதும் கிஞ்சிற்றும் எந்த வித சந்தேகமும் இல்லாமல் தக்வா பக்திமானாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு எம்பெருமானார் நபிகள் கோமான் வரை சரியாக ஹதீஸ் சென்று சேரும் தூய்மை நிறைந்த பெருமானாரின் சொல், செயல், மௌனம், உவமை, உதாரணம், சம்பவம் சஹ்ஹீ ஹதீஸ் என்பதும், எல்லாவிதங்களிலும், எல்லா காலங்களிலும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட புனிதமிக்க ஹதீஸ் ஹதீஸே சஹீஹ் என்பதாகும்.

இந்த ஹதீஸ்களை கோர்வை செய்யும் போது இமாம் புகாரி (இமாம் புகாரி அவர்களின் வரலாற்றுச் சுருக்கத்தை இன்ஷா அல்லாஹ் அடுத்து கொடுப்போம்) அவர்கள் சஹ்ஹீக்கான சில ஷரத்துகளை நிர்ணயிக்கிறார்கள். (1) சியர் - ஹதீஸ் கூறுபவரின் நம்பகத்தன்மை வரலாற்று ஆதாரப்பூர்வமாய் சரியாய் இருத்தல். (2) தப்ஸீர் - ரிவாயத்து பெயர் பட்டியலில் வரும் அத்தனை பேர்களும் விளக்கமாக மக்களால் அறியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டவராய் இருத்தல் வேண்டும். (3) ஆதாப் - பெரியோர்களை மதித்து நடப்பவராகவும், இவர் மதிக்கப்படும் நபராகவும் இருத்தல் வேண்டும். (4) அகாயித் - சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கைகளில் நிலைத் திருந்தவர்களாக இருத்தல் வேண்டும். (5) அஹ்காம் - ஷரீஅத் சட்டதிட்டங்களை பேணி பாதுகாத்து நடந்து வந்தவர்களாக இருத்தல்வேண்டும். (6) மனாகிப் - ரிவாயத் செய்பவரைப் பற்றி ஜமாஅத்துகளாளோ, கபீலாக்களாளோ, சமூகத்தார்களாளோ, எந்த வித குறைச் சாட்டுக்கும் ஆளாகாதவர்களாக இருத்தல் வேண்டும். (7) ஃபிதன் - அவரவர் வாழ்ந்த காலங்களில் இஸ்லாமின் பால் ஏற்படுத்தப்பட்ட பித்னா குழப்பங்களில் எவ்வித தொடர்பும் இன்றி தூயவராய் இருத்தல் வேண்டும். (8) ஷராயித் - மேற்கண்ட ஷராயித்துகளான அளவுகுறிக் ளோள்களில் பூர்ணமாக பொருந்திவரும் ஹதீஸைத் தான் சஹீஹ் ஹதீஸாக ஏற்றுக் கொள்ளப்படும்.

இமாம் புகாரி அவர்களைப் பற்றிய வரலாற்றை தொகுத்து தம் கைப்பட 08.03.1983ல் எழுதிய சாஹெப் வலியுல்லாஹ் சஹீ ஹதீஸ்களைப் பற்றி மேற்கண்ட ஷரத்துக்களும் வியாக்கா னமும் எழுதி மேலும் சுருக்கமாக சஹீஹ் ஹதீஸ்களைப் பற்றி இப்படி குறிக்கிறார்கள்.

முஹத்திஸீன்களான ஹதீஸ்களை வல்லுநர்கள் ஏன் இப்படிப்பட்ட கடுமையான ஷரத்துக்களை அதிலும் குறிப்பாக இமாமுனா புகாரி அவர்கள் முன் வைக்கிறார்கள் என்றால் 13 ஷவ்வால் பிறை 164 ஹிஜ்ரி ஆண்டு மாவராவுன்னஹர் மாநிலத்தில் புகழ்பெற்ற ஊரான புகாராவில் பிறந்த இமாம் அவர்கள் கல்வி கேள்விகளில் அக்கால தக்வா முறைப்படி மிகமிக பேணுதலாக கடைபிடித்து சுமார் ஐந்து, ஆறு தலைமுறைக்கு முன்னால் வரும் ஹதீஸைக் கூறும் சஹாபிகளின் பட்டியலில் எந்தவித சிறு குறையோ குற்றச்சாட்டோ வந்து விடக்கூடாது என்பதற்காக எந்தவித சவுகரியங்களும் இல்லாத காலத்தில் ஊரூராக சென்று பல மைல்கள் வெயில், காற்று, பனி, குளிர் என்று எதையும் பொருட்படுத்தாது ஹதீஸின் நம்பகத்தன்மை நிலைத்திருக்க வேண்டும் என்று கோர்வை செய்த நூல் தான் இன்று சஹீஹ் புகாரி ஷரீஃப் என்று இஸ்லாமிய உலகம் கண்ணின் மணிபோல் போற்றிப் புகழ்ந்து தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறது.

### கோர்வை செய்த தூய முறை :

இவ்விதம் பரிபூர்ண பரிசுத்த எண்ணத்துடன் கோர்வை செய்யப்பட்ட சற்றேரக்குறைய ஆறு லட்சம் ஹதீஸ்களிலிருந்து வடிகட்டி சுமார் நான்காயிரம் ஹதீஸ்களை தேர்ந்தெடுத்து இந்த புகாரி ஷரீஃப் என்ற கிரந்தத்தில் கோர்வை செய்ய பதினாறு ஆண்டு காலம் எனக்கு தேவைப்பட்டது என இமாம் குறிப்பிடுகிறார்கள். அதையும் எப்படி கோர்வை செய்தேன் தெரியுமா....?

ஆறு லட்சம் ஹதீஸ்களையும் திரட்ட உயிருக்கு உயிரான உயிரைவிட மேலான நபிகள் கோமான் கண்மணி நாயகம் அவர்களின் தலைவாசலான ரஸூலுல்லாஹ்வின் தர்காவான ரௌலா ஷரீஃபின் முன் அமர்ந்து அந்த ஆறு லட்சம் ஹதீஸ்களிலிருந்து தேர்ந்தெடுத்து சஹீஹ் புகாரி கிரந்தத்திற்காக பதிவு செய்யும்முன் முதலில் குளிப்பேன், இரண்டு ரகஅத் மஸ்ஜிதே நபவியில் நபில் தொழுவேன். பின் நபி பெருமானார் அவர்களின் ரௌலா ஷரீஃபிற்கு நேரே அமர்ந்து இஸ்திகாரா என்னும் அமலை நறுமணம் கமழ ஓதி முடிப்பேன். சஹீஹ் ஹதீஸ் என்று உதிப்பு எனக்கு ஏற்பட்ட பின் அதை நான் கோர்வை செய்யும் புகாரி கிரந்தத்தில் பதிவு செய்வேன். எனவே தான் இதை முழுமையாக்க எனக்கு பதினாறு ஆண்டுகள் தேவைப்பட்டது என இமாம் புகாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

### புகாரி ஷரீஃபின் முழுப் பெயர்:

மனமார்ந்த அகீதத்துடன், புனிதங்கள் பூத்துக் குலுங்க, அல்லாஹ் வின் மீது உள்ளார்ந்த ஈமான் பிடிப்புடன், அவனது ரஸூலின் மீது இஷ்க் என்னும் இணையில்லா நேசமும், பக்தி மரியாதையும், நறுமணம் கமழ கோர்வை செய்த நூலின் முழுப் பெயர் **அல் ஜாமிஉஸ் சஹீஹுல் மஸ்னதுல் முக்தஸர் மின் உமூரி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்** என்பதாகும். அதையே தான் சுருக்கி சஹீஹ் புகாரி என இஸ்லாமிய உலகம் அழைக்கிறது.

இந்த நூலின் மேன்மையைப் பற்றியும், ஹதீஸ்களின் உதாரணங்களையும், அதற்க்காக இமாம் அவர்கள் எடுத்துக் கொண்ட ஆர்வம் பற்றியும் சற்று விரிவாக அடுத்த இதழில் காண்போம்.

மேலும் மொழிவோம்.....

## ஹேட்லி அமெரிக்க உளவாளியே...
## பெரியண்ணன் அமெரிக்காவிடம் கெஞ்சி கூத்தாடும் சின்ன தம்பி இந்தியா...
## இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி, பாலஸ்தின உறவு...
## அத்வானியின் உடைந்து போன பாரதப் பிரதமர் பகல் கனவு...
## கட்டுரைப் போட்டி வெற்றியாளர்களுக்கு ஒட்டகனாரின் மனமார்ந்த பாராட்டுகள்...

மிட்டாய் பேக்கட்டுடன் உள்ளே நுழைந்த நாம் ஒட்டகனாருக்கு வாயில் ஊட்டிவிட முயற்சித்தோம். மனிதன் இனிப்புக்குக் கூட வாய் திறக்கவில்லை. "ஒரு வேளை ஷுகர் இருக்குமோ...?" என்று கிண்டலடித்தோம். "எனக்கா ஷுகர்?" என்று முறைத்தார். B.P எகிறிவிடக் கூடாதே என்று ட்ராக்கை மாற்றி....

"நீங்க சொன்னீரே ஹெட்லி அமெரிக்காவின் உளவாளி என்று, உண்மையாகவே அவர் உளவாளி தான் என்று இப்போது செய்திகள் வந்த வண்ணம் உள்ளது. அசலான உமது உண்மைச் செய்திக்காக எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகையின் பேரில் ஓதப்பட்ட பாத்திஹா ஷீரனி மிட்டாய் தான் அது." என்ற போது மிட்டாய் பெட்டியையே முழுங்கும்படி வாய் திறந்தார்.

"நன்றி நானே சொல்ல வேண்டும் என்று இருந்தேன். நீர் முந்திக் கொண்டீர் வரிவாக சொல்கிறேன் கேளும்..."

பம்பாய் குண்டு வெடிப்பில் ரயில்வே ஸ்டேஷன், ஆஸ்பத்திரி, என பிரதமரே போக முடியாத இடத்துக்கு முஸ்லிம்களின் கொலைக் கரம் குஜ்ராத் மோடியும், தாஜ் ஹோட்டல் டாடாவும், பிடிக்கப்பட்ட கஸாபும் ஒரே நாடக மயம், இது போதாது என்ற கஸாப் என்ற ஒரு கேரக்டர் கிடைத்த அடுத்த நெடியே அமெரிக்க உளவு சிஐஏ அதிகாரிகள் இந்தியா வந்து முதலில் பார்த்த பெண்ணை பாஸ்போர்ட் விசா என எதுவும் இல்லாமலேயே அமெரிக்கா அழைத்து சென்று ஒரு வாரம் விசாரித்து அனுப்பினார்கள். இவை எல்லா ஊடகங்களிலும் வந்தது தான்.

ஆனால் ஹெட்லி பிடிபட்டு இரண்டு மாதம் ஆகியும், அவன் தனக்கு பம்பாய் தாக்குதலில் பங்கு உண்டு என பகிரங்கமாக ஒப்புக் கொண்ட பிறகும் நம் இந்திய அதிகாரிகள் இரண்டு முறை அமெரிக்கா சென்று பல நாட்கள் காத்திருந்தும் அவனை விசாரிக்க அவன் இருக்கும் சிறைக்கு அல்ல, அவன் சிறை இருக்கும் ஊருக்குக் கூட அமெரிக்க வல்லூறுகள் நம் இந்திய அதிகாரிகளை அனுமதிக்கவில்லை.

இது போதாது என்று நம் அதிகாரிகள், அமைச்சர்கள் பிரதமர் உட்பட அட்லீஸ்ட் அவனை அங்கேயே வைத்து விசாரிக்க விடுங்கள் என்று (அணு ஒப்பந்தம், கைதிகளை அதிலும் குறிப்பாக தீவிரவாதிகளை பாரபட்சம் இன்றி விசாரிக்கும் International law - சர்வதேச குற்றவியல் ஒப்பந்தத்தின் படி) அனுமதி வேண்டி கெஞ்சோ கெஞ்சு என்று கெஞ்சுகிறார்கள்.

"ஆஹா எப்படிப்பட்ட நட்பு நாடு நம் அமெரிக்கா என்று கமெண்ட்ஸ் அடித்த நம்மை ச்சு பேசாதே சொல்வதைக் கேள் என தொடர்ந்தார்.

ஒரு காலத்தில் மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தியின் தோழமையில் இருந்த அருண் நேரு தினமணி தலையங்க கட்டுரையில் தம் கருத்தை எழுதியுள்ளார்.

"ஹெட்லி அமெரிக்க குடிமகன். அவர் மன்னிப்பு கோரி உண்மைகளை தெரிவிக்கிறார் என்பதற்காக மும்பையில் அவரின் வழிகாட்டுதல் படி நடந்த படுகொலைக்கான தண்டனையைத் தராமல் எப்படி அவரை விட்டு விட முடியும்? இந்தியாவுக்கு மேல் விசாரனைக்கு அனுப்பி வைக்க வேண்டும். பயங்கரவாதிகள் அமெரிக்க குடியுரிமை பெற்றிருந்தால் அவர்களுக்கு மட்டும் தனிச் சட்டம் அமலாகுமா என்ன? நன்றி! தினமணி 27.03.2010

பயங்கரவாதத்தை வேரோடு அழிக்க வேண்டும் என்றும், ஓயாமல் கிளிப் பிள்ளைப் போல் சொல்லும் அமெரிக்கா தான் பயங்கரவாதிகளின் ஊற்றுக்கண் என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது அல்லவா?

இந்தியாவுடனான அமெரிக்காவின் நட்பின் லெட்சனமே இது என்றால் அதன் கள்ளக் குழந்தையாக ஜனித்த இஸ்ரேலுடன் இல்லாத பொல்லாத நட்புக்கு இந்தியாவை அமெரிக்கா இஸ்ரேலுடன் கோர்த்துவிடப் பார்க்கிறது.

அது சரி! "கேழ்விரகில் நெய் வடிகிறது என்றால் கேட்பார் புத்தி எங்கே போச்சு?" என்பார்கள். அதைப் போல் நம் இந்தியா சிந்திக்க வேண்டாமா? என்று நாம் கேட்டதை "உன் மூளையும் பழமொழி சொல்ல நல்லா வேலை செய்யுதே!" என்று ஆச்சரியப்பட்டார்.

"இந்திரா காந்தியும், ராஜிவ் காந்தியும் இருந்த வரையில் பாலஸ்தீனர்களின் அபயக் குரலுக்கு ஆபத் பந்தானாகவும், சுமூக மாக இந்தியாவுடன் பெட்ரோல் வர்த்தகத்தை கொண்டுள்ள அரபு நாடுகளுக்கு நட்பாகவும், ஒருங்கினைந்த ரஷ்யாவுக்கு ஆதரவாகவும் நடந்து வளர்ச்சிப் பாதையில் நடைபோட்ட நம் இந்திய நாடு பொருளாதாரத்தின் படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் அமெரிக்கா எழுந்து நிற்க மேனாமினுக்கியாக விரிக்கும் வஞ்சக வலையில் வீழ்வதால் வருங்கால இந்தியா என்ன ஆகுமோ என்று உண்மையான தேசிய வாதிகள் அஞ்சுகிறார்கள்."என்று ஒரே மூச்சில் பேச்சை முடித்தவருக்கு வர்க்கி ரொட்டியையும், நாட்டு கோழிக்குஞ்சு சூப்பையும் கொடுத்தோம். ருசித்து சாப்பிட்டு சூப்பை குடித்து "அல்ஹம்து லில்லாஹ்" என்று ஏப்பம் விட்டவரை...

பாப்ரிப் பள்ளி விஷயத்தில் அத்வானிக்கு எதிராக துணிந்து சாட்சி சொன்ன ஐபிஎஸ் அதிகாரி அஞ்சு குப்தா பற்றி என்றோம்.

அல்லாஹ் ஆட்டுக்கு வாலை அளந்து வச்சிருக்கான் என்று சொன்னவர்கள் பாப்பரிப் பள்ளி ஷஹீதாக்கப்பட்டு. இடிந்ததை விட சுக்கு நூறாய் உடைந்து போன பிரதமர் கனவுடன் அத்வானி அன்று நடத்திய அட்காசம் வெளியே வந்திருக்கு தினத்தந்தியின் சிந்து பாத் கதை போல தாமதமாக வரும் நீதி அநீதிக்கு சமம் என்றாலும் ஐபிஎஸ் அதிகாரியாக அஞ்சு குப்தா அன்று அஞ்சாமல் வினய்கட்டியார், உமா பாரதி, சாத்வியா ரிதம்பா போன்றோர்களைப் பற்றிய உண்மைகளை போட்டு உடைத்துள்ளார். எண் வாரியாக குறித்துக் கொள்....

அவர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே நம் தர்கா அலுவலக ஆட்கள் பரிசுப்பொருட்களை பைகளில் எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். ஒட்டகனார் அர்த்தம் பொதிந்த சிரிப்பை உதரித்துவிட்டு "வந்தது முதலே கேட்கலாம் என்று தான் இருந்தேன். கட்டுரைப் போட்டிக்கு நிறைய கட்டுரைகள் குவிந்துள்ளதாக எனக்கு முன்பே செய்தி கசிந்து விட்டது. இந்த வருடம் சாஹெப் உருஸ் விழாவை முன்னிட்டு கட்டுரைப் போட்டிகள் நடத்தியதற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்! சாஹெப் உருஸ் மேடையில் சந்திப்போம் வஸ்ஸலாம்! என கூலான மூடில் வெளியே கிளம்பிப்போனார் நம் ஒட்டகனார்.

# பொள்ளாச்சி வட்டார ஜமாஅத்துல் உலமா சபை வஹ்ஹாபியத்துக்கு வக்காலத்து வாங்குகின்றதா...?

பொள்ளாச்சி ஹனஃபி தக்னி ஜாமிஆ பள்ளியில் காலங்காலமாக சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கைப்படி மௌலூது, மீலாது, ஃபாத்திஹாக்கள் எந்தவித தடங்களும் இன்றி முத்தவல்லி, ஜமாஅத்தார்கள், பேஷ் இமாம் ஹஜ்ரத்மார்கள் என எல்லோரின் நல் ஒத்துழைப்புடனும் இதுநாள் வரை நடந்துவந்துள்ளது. இம்முறையும் மௌலூதிற்காக முதவல்லி சாஹிப் அவர்களிடம் ஏற்பாட்டிற்காக ஜமாஅத்தார்கள் அணுகியிருக்கிறார்கள். மௌலூது ஓதக் கூடாது என்றும், மௌலவி ஹாஜி ஷிஹாபுத்தீன் பேஷ் இமாம் ஹஜ்ரத் அவர்கள் பொள்ளாச்சி ஜமாஅத்துல் உலமா சபை சார்பாக மௌலூது ஓதுவது பர்லு, வாஜிபு, சுன்னத், முஸ்தஹப் இவைகளில் எதுவும் கிடையாது என்று கூறியுள்ளார் என்றும், கூடும் என்றால், நீங்கள் பத்வா கொண்டு வாருங்கள் என்று முதவல்லி அவர்கள் கூறியுள்ளார்கள்.

திகைத்துப் போன ஜமாஅத்தார்கள் சஹாபாக்கள், தாபயீன்கள், தபவுத்தாபயீன்கள், நான்கு இமாம்கள், வலிமார்கள், நாதாக்கள், உலமாக்கள் என எல்லோரும் அதுவும் ரஸூலுல்லாஹ் திருச் சபையின் கவிஞர் பெரு மக்களான கஃப் இப்னு ஜுபைரின் கஸீதயே பனாத்து சுவாதும், மதீனா பள்ளியில் மிம்பர் படிக்கட்டில் உட்கார வைத்து புகழ்பாடிய பின் அகமகிழ்ந்து நபிகள் பெருமான் தன் பொன்னாடை போர்த்திய வரலாற்றுப் பதிவும், சஹாபியக் கவிஞர் ஹஸ்ஸான் பின் சாபித் நபியை புகழ்ந்து பாடிய கவிதைகளும் மக்காவிலிருந்து மதீனத்துக்கு ஹிஜ்ரத்து செய்து சென்ற போது தஃப்பு கொட்டடித்து நபிகளாரை புகழ்ந்து பாடியதும், இமாம் பூஸரி பாடிய புர்தாவும், இமாம் கஸ்ஸாலியால் இயற்றிய மௌலூது, சதகதுல்லாஹ் அப்பா, மாப்பிள்ளை லெப்பை ஆலிம்...... எட்டயபுரம் உமர் புலவரின் சீறாப்புராணம் போன்ற அனைத்தும், சுன்னத்தான, நல் அமல்கள் இல்லையா என சரமாரியாக பொது மக்களே கேள்விகளை தொடுத்ததும் பெரும் பிரச்சனை ஆகிப் போனது.

தமிழகத்தின் பல ஊர்களிலிருந்து உலமாக்களும், பொதுமக்களும் தொலைப் பேசி மூலம் விளக்கம் கேட்டும், முனாஜிராவுக்கு வருவதாகவும் கூறியபின் மேற்படியாளர்கள் அதே பத்வாவில்(!?) சில மாறுதல்கள் செய்து

பொதுவாக முஹ்யித்தீன் மௌலிது ஷரீஃப் ஓதுவது விரும்பத்தக்க செயல். பர்லோ வாஜிபோ சுன்னத்தோ முஸ்தஹப்போ இல்லை. ஆனால் ஓதினால் நன்மை கிடைக்கும். விட்டால் குற்றம் இல்லை ஓதுபவர்களை வேண்டாம் என்று தடுக்கவும் வேண்டாம் ஓதாதவர்களை ஓதுங்கள் என்று கட்டாயப் படுத்தவும் வேண்டாம். பள்ளியில் ஓதுவதாக இருந்தால் முஹ்யித்தீன் மௌலிது தாராளமாக ஓதலாம்.

**குறிப்பு :** இந்த விளக்கம் திருப்தி அடையாத பட்சத்தில் மேற்கொண்டு விளக்கம் தேவைப்பட்டால் அரபிக் கல்லூரிகளை தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டுக் கொள்ளவும்.


POLLACHI JAMATHUL ULAMA SABAI

ஜமாஅத்துல் உலமா லெட்டர்பேடில் மூன்று முல்லாக்கள் கக்கிய வஹ்ஹாபிய விஷம்.


POLLACHI JAMATHUL ULAMA SABAI

வஹ்ஹாபிய முல்லாக்களை காப்பாற்ற பொள்ளாச்சி ஜமாஅத்துல் உலமா கொடுத்த முரண்பட்ட கடிதம்

இப்படிப்பட்ட ஒரு முன்னுக்குப் பின் முரணான பத்வாவை இருபதுக்கும் மேற்பட்ட தங்களை ஆலிம் என்று கூறிக்கொள்வோர் கையெப்பமிட்டு கொடுத்துள்ளனர்.

இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் மௌலிது ஷரீஃப் ஓதுவது விரும்பதக்க செயல் என்று கூறிவிட்டு அதற்குப் பின் முஸ்தஹப் இல்லை என முரண்பாடாக கூறுகிறார்கள். முஸ்தஹப் என்றாலே அது விரும்பதக்கது தான்.

இதுவரை தவ்ஹீதுவாதிகள் எனக் கூறிக் கொள்வோர்தான் வஹ்ஹாபிய நச்சுக் கருத்துகளை பகிரங்கமாக கூறி வந்தார்கள் என்றால் பொள்ளாச்சி வட்டார ஜமாஅத்துல் உலமாவும், வஹ்ஹாபிய கொள்கைகளை ஏற்றுக் கொண்டதா? அதை தைரியமாக பகிரங்கமாக அறிவிக்கலாமே!

1. மௌலூது ஓதலாமா கூடாதா என்பதுதான் கேள்வியே தவிற ஃபர்ளா? வாஜிபா? சுன்னத்தா? முஸ்தஹப்பா? எந்த இபாதத்தில் அது சேரும் என்ற பிரச்சனையல்ல.

2. ஃபத்வா வழங்குவதென்றால் மௌலூது ஓதலாமா என்று கேட்ட கேள்விக்கு இவர்களின் பதில் படி கூடாது என்றால் அதற்கான ஆயத்துகள், ஹதீஸ்கள், இமாம்களின் சட்டங்களுடன் பதில் அளிக்க வேண்டும்.

கழுவும் மீனில் நழுவும் மீனாக மௌலூது ஷரீஃப் ஃபர்லு, வாஜிபு, சுன்னத், முஸ்தஹப்பு இவைகளில் எதுவும் கிடையாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்று ஆயத்தோ, ஹதீஸோ, தலீலோ ஏதும் இன்றி மொட்டை தாத்தன் குட்டையில் விழுந்தான் என்ற பாணியில் பதில் தருவது ஒரு உலமா சபைக்கு அழகா?

3. மௌலானா மௌலவி அல்ஹாஜ் ஷிஹாபுத்தீன் அவர்கள் மௌலூது ஹராம் என்றே கூறிவிட்டுப் போகட்டும். அது அவரின் தனிப்பட்ட சாக்கடை சிந்தனையாக இருக்கலாம். பொள்ளாச்சி ஜமாஅத்துல் உலமா சபையின் லெட்டர் பேடில் கொடுத்தது தமிழகம் முழுக்கவுள்ள ஜமாஅத்துல் உலமா சபை ஏற்றுக் கொள்கிறதா? என்பது தான் நம் குழப்பம்.

4. அப்படி ஜமாஅத்துல் உலமா ஒத்துக் கொள்ளவில்லை எனில் மேற்படி ஆலிம் மீது என்ன நடவடிக்கை? இன்னும் மௌனமாக இருந்தால் ஏற்கனவே மௌலூது, மீலாது, பாத்திஹா, கொடியேற்றம், கந்தூரி, தர்காக்கள், வலிமார்கள் பற்றி உலமா சபையின் சில ஆலிம்கள் முன்னுக்குப் பின் முரணாக பேசுகிறார்கள் - கருத்து கூறுகிறார்கள் என்ற பேச்சு முஸ்லிம் பொதுமக்கள் மத்தியில் உள்ளது. இது தொடர்ந்தால் மேலும் உலமா சபை மக்களைவிட்டு தூரமாகி பொதுமக்களே உலமா சபையை நிராகரிக்கும் சூழல் உருவாகிவிடும் என எச்சரிக்கிறோம்.

# உயிர் நாளங்களில் ஒலியாக்கள்...!

**வலிமார்களின் கராமத் சவூதி அரேபியாவிலும் நடக்கும் ஜித்தா வாசகியின் கராமத் அனுபவக் கடிதம்...**

மேன்மை பொருந்திய வலிமார்களின் கராமத் ஒன்றை என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வை தர்கா இதழ் வாசக நேசர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன்.

இந்த சம்பவம் வலிமார்களையும், அவர்களின் மகோன்னத கராமத்து களையும் துச்சமாக கருதும் அற்பர்களுக்கு ஒரு பாடமாவும், படிப்பினையாகவும் இருக்கும்.

**ஜித்தா நகரம்...**

சவூதி அரேபியாவின் ஜித்தா நகரம். மணற்புயல் ஓய்ந்து மக்கள் சற்று திருப்தி கொண்டு நடமாட்டம் இயல்புக்கு திரும்பிய ஓர் இரவு. என் வாழ்வில் சோதனைகளின் புயல் தன் உச்சத்தை அடைந்த நேரம்.

இரு தினங்களாக என் இரண்டு குழந்தைகளுக்கும் காய்ச்சல் சற்று கூடுதலாக வாட்டிக் கொண்டிருந்தது. என் 1½ வருட பெண் குழந்தைக்கு திடீர் என்று வலிப்பு வந்துவிடவே என் கணவரும் நானும் அருகில் உள்ள விலாதா என்ற அரேபியர்கள் மருத்துவ மனையிக்குள் நுழைந்து விட்டோம்!

மருத்துவர் முதற்கொண்டு பணிப் பெண்கள் வரை எல்லோரும் அரபியில் தான் பேசுகிறார்கள்! என் மற்ற குழந்தைக்கோ, என் கணவருக்கோ உள்ளே அனுமதி இல்லை. அரேபியர்களும், மருத்துவத் தொகை என்னவாகிறதோ அதை அவர்கள் கட்ட வேண்டும். மிகவும் ஏழையான அதுவும் சவூதியர்களுக்கு சிபாரிசு இருந்தால் மட்டுமே சலுகை தரப்படும். அப்படி இருந்தாலும் கணிசமான தொகையை அவர்கள் கட்டியாக வேண்டும் அப்படிப் பட்ட மருத்துவமனை.

ஏதோ விலை உயர்ந்த டெஸ்டுகள் எல்லாம் எடுத்துக் கொண்டிருந்தார்கள் ஜுரமோ குறைந்த பாடில்லை. மருத்துவர்களும் மிகவும் போராடி னார்கள். இறுதியாக என் தந்தையின் அறிவுறுத்தலின் படி வலிமார்களின் கோமான் எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகையின் பேரில் நேர்ச்சை செய்ததில் காய்ச்சல் குறைய ஆரம்பித்தது.

**எகிப்திய மருத்துவர்...**

மருத்துவமனையின் கண்காணிப்புப் பிரிவல் அனுமதிக்கப்பட்ட என் 1½ வருட பெண் குழந்தைக்கு ஊசிகளும் மருந்துகளும் அவள் பிஞ்சு உடம்பை ரணப்படுத்திக் கொண்டிருந்தன. மருத்துவமதனையிலேயே இரண்டு நாட்கள் கடந்துவிட்டன. மறுபுறம் மருத்துவமனையின் பில் எவ்வளவு தீட்டப் போகிறார்களோ என்ற கவலை என்னை வதைத்துக் கொண்டிந்தது. விசாரித்ததில் சாதாரணமாக 12,000 ரியால் வரை ஆகும் என்றார் நம் குடும்ப மருத்துவர். மனது கணக்குப் பேட்டது. நம் இந்திய மதிப்பில் அல்லாஹ்வே எவ்வளவாகும்!? தலை சுற்றியது.

திடீர் என்று இவ்வளவு பெரிய தொகைக்கு என்ன செய்வது என்ற கலக்கம். ஏதோ ஒரு விஷக் காய்ச்சல் என் கணவருக்கும் , நான்கு வயது மகனுக்கும். என் கால்கள் துவண்டு கொண்டிருந்தன.

அப்போது ஒரு எகிப்திய மருத்துவர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு மருந்துகள் அடங்கிய பாக்கெட்டை நீட்டி இதனை இப்போதே சாப்பிட ஆரம்பித்து விடுங்கள். தாமதிக்க வேண்டாம் என்றார். அவரோ முன் பின் தெரியாதவர். நம் மருத்துவர்ரிடம் இதைப் பற்றி கூறலாமா வேண்டாமா என்ற சந்தேகம் எங்கள் இருவருக்கும்.

**ஒரு பீவியின் வருகை...**

மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை காலை 5½ மணியளவில் ஒரு பெண்மணி கோஷாவுடன் பின்புறமாக என் தோள்களில் கை வைத்தார். யார் என்று திகைப்புடன் பார்த்தேன்.

அஸ்ஸலாமு அலைக்கும்! என்று கூறிய அவர், நான் உங்கள் சகோதரி! நான் சொல்லப் போவதை கவனமாக கேளுங்கள்! உங்கள் குழந்தைக்கு மெனின்ஜிடீஸ் Meningitis உள்ளது. அந்த இன்பெக்ஷனால் மூளை கூட பாதிக்கப்படலாம். ஆகவே பொறுமையாக இருங்கள்...

மருத்துவமனையில் தரப்படும் அனைத்து வசதிகளையும் சங்கோஜ மில்லாமல் ஏற்றுக்கொள்ளுங்கள். இங்கிருந்து அவசரமாக சென்று விடாதீர்கள். பணத்திற்கு என்ன செய்வது என்ற உங்கள் கவலையை விடுங்கள்.

இக்குழந்தை டிஸ்சார்ஜ் ஆகும் போது நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்! அதுவரை பேசாமல் அமைதியாக இருங்கள்! என்று தன் ஆள்காட்டி விரலை தன் உதடுகளில் அழுத்திபடி யாரிடமும் உதவியும் கேட்காதீர்கள்! அதற்கான முயற்சியும் செய்யாதீர்கள்! யாரும் உங்கள் நண்பர்கள் பண உதவி செய்கிறோம்! என்று உதவ முன் வந்தாலும் அதற்கு மறுத்து விடுங்கள். பணத்திற்காக என்ன செய்யப் போகிறீர்கள் என்று அவர்கள் உங்களை கேட்டாலும் வல்ல நாயன் இருக்கிறான் அவனிடமிருந்து கிடைக்கும் என்று தெளிவாக மறுத்து விடுங்கள்!

தற்போது உங்கள் கணவருக்கும் இதே சஞ்சலமுள்ளதால் அவரிடம் கலங்காதீர்கள். இறைவனிடமிருந்து உதவி கிடைக்கும் என்று மட்டும் அவரிடம் தைரியம் கூறுங்கள். நான் வந்ததையும், கூறியதையும் தெரியப்படுத்த வேண்டாம்! என்றார்.

அவர் சொல்லும் போதே என் மனது உள்ளுக்குள் இவர் யாராக இருக்கும்? என்று தனக்குத் தானே பல முறை கேட்டுக் கொண்டது. ஒரே குழப்பமாக இருந்தது.

ஆம்! அப்போது தான் என் நினைவிற்கு வந்தது! நேற்று காலை இதே கோஷாவுடன் வந்த இவரைக் கண்டு மருத்துவர் வருகிறார் என செவிலியர்கள் பணிந்து வழிவிட்ட போது எனதருகே வந்த அவர் உங்கள் குழந்தைக்கு என்னவாயிற்று என்று பரிவுடன் கேட்க, நானோ "எத்தனைப் பேரிடம் தான் திரும்பத் திரும்ப சொல்வது?" என்ற விரக்தியில் சலிப்பு மேலிட மேஜையின் மீதுள்ள சில தாள்களை காட்டி அதிலே இக்குழந்தையைப் பற்றிய விவரம் உள்ளது என்றேன்.

**சூடானிய மருத்துவர்...**

அத்தாள்களை புரட்டியவாறே அவ்விழிகள் அனுதாபத்தோடு என்னை பரிவோடு நோக்கிக் கொண்டிருந்தது சற்று உறுத்துதலாக இருந்தது. யாராக இருக்கும்...!? நீங்கள் எந்த நாட்டவர்? என்றேன். சூடான் ஒற்றை வார்த்தையில் பதில். உங்கள் பெயர்? ஏதோ கூறினார்... ஆனால் மனம் ஏதோ சிந்தனையால் சூழன்றடித்துக் கொண்டிருந்ததால் அவர் சொன்னது என் மனதில் பதியவில்லை.

அட! அதே பெண்மணிதான் இவர். ஆம்! பெரிய மருத்துவர்! சந்தேகமில்லை! சுதாரிப்பதற்குள் அவர் என்னை கடந்து சென்று கொண்டிருந்தார்.

ஏதோ கூற நினைத்த என் நாவும், பின்தொடர முற்பட்ட என்கால்களும், கட்டுண்டு கிடப்பதை உணர்ந்த நான் அதிலிருந்து விடுவித்துக் கொண்டு நன்றி என்று மட்டும் கூற முடிந்தது. ஆனால் அவர் வெகுதூரம் சென்றிருந்தார்.

திங்கள் காலை 5½ மணியளவில் நான் உறங்கிக்கொண்டிருந்தேன். சட்டென துயில் கலைந்தது முன்பு பார்த்த பெண் மருத்துவர் குழந்தையின் தலையை வருடிக்கொண்டிருந்தார். தங்களுக்கு மிக்க நன்றி இப்போது நானும் என் கணவரும், குழந்தைகளும் நலமாக இருக்கிறோம் என்றேன். அவரோ குழந்தை எப்படியுள்ளது? சாப்பிடுகிறதா? பால் குடிக்கிறதா? என்பதை மட்டும் கேட்டார். ஆம் நன்றாக உள்ளது என்றேன். புன்முறுவலுடன் கிளம்பி விட்டார். பின் தென்படவில்லை.

என் குழந்தையின் மருத்துவர் எப்போதும் போல் 10மணியளவில் ரவுண்ட்ஸ் வந்தார். இப்போது குழந்தை நன்றாக உள்ளது நீங்கள் வீடு போகலாமே...! டிஸ்சார்ஜ் என்று எழுதிக் கொடுத்தார்.

பில் கேட்டு செவிலியரிடம் விசாரித்தேன். தங்களுக்கு 2000 ரியால்கள் வந்துள்ளது என்றார். அப்படியா சரி என்று

தலையாட்டுவதற்குள் அந்த செவிலியரே மருத்துவரிடம் பேசி வருகிறேன் என்று உள்ளே போனவர் 5 நிமிடத்தில் திரும்பி 150 ரியால்கள் மட்டும் கட்டினால் போதும் என்றார்.

எனக்கு ஒரு நிமிடம் ஒன்றுமே புரியவில்லை. அந்த அம்மையாரின் வார்த்தைகள் மெய்யாகிக் கொண்டிருந்தன.

மீண்டும் எகிப்திய மருத்துவரையும், கோஷா அணிந்த சூடானிய மருத்துவரையும் தேடினேன்! என்னோடு கணவரும் மருத்துவ மனையில் தெரிந்த இடமெல்லாம் தேடியும் அவர்கள் இல்லை. குழந்தை தன் மழலை மொழியில் எதையோ காட்டி ஏ க்யா ஏ (என்ன இது?) என்று கேட்டது. அது தான் கண்ணே எங்களுக்கும் புதிராக இருக்கிறது என்ற வாறே மகிழ்வுடன் வெளியே வந்தோம்.

விடைபெற திரும்புகையில் என் கவனம் மருத்துவமனை உச்சியில் சென்றது. நபிகளாரின் திருப்பெயரை தாங்கிய பச்சை நிறக் கொடி பட்டொளி வீசி கம்பீரமாக பறந்து கொண்டிருந்ததைக் கண்டு என் மனம்அடைந்த பரவசத்திற்கு எல்லையே இல்லை.

பின் நானும் என் கணவரும், வீடு திரும்பிய சிறிது நேரத்தில் மருத்துவர் செல்போனில் தொடர்பு கொண்டார். உங்கள் சிறிய குழந்தைக்கு போட வேண்டிய நான்கு தடுப்பூசிகள் மீதம் உள்ளன. என்வே நீங்கள் தவறாமல் வந்து இலவசமாகவே அந்த தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளுங்கள் என்றார். வலிமார்களின் அருளுக்கு நிகர் இல்லை என நினைத்துக்கொண்டேன்.

**வலிமார்கள் எப்படியும் உதவுவார்கள் :**

மனிதனின் வாழ்வில் துன்பங்களும் துயரங்களும் இயல்பானது தான் கேள்வி அது வல்ல! அவைகள் நம்மை தீண்டும் முன் நம் உயிர் நாளங்களில் வீற்றிருக்கும் முர்ஷித்மார்கள் மருத்துவராகவோ செவிலியராகவோ ஃபக்கீராகவோ, அதிகாரியாகவோ இன்னும் ஏதோ ஒரு ரூபத்தில் நம்மை அரவணைத்து அத்துயரத்திலிருந்து மீட்டு விடுகிறார்கள்!

நீங்கள் முரீதாக இல்லை என்றாலும் பரவாயில்லை. முஹ்யித்தீன் ஆண்டகையாகவோ, முயீனுத்தீன் அஜ்மீரியாகவோ, எஜமான் காதர்வலி நாயகமாகவோ இருக்கலாம். அல்லது நீங்கள் அவசரமாக வெளியில் இருந்தபடி பணிவுடன் சலாம் சொல்லிச் சென்ற ஏதோ ஒரு தர்காவின் ஒளலியாவாகவும் இருக்கலாம்.

சோகம் படர்ந்த உன்முகம் பார்ப்பதற்கு எப்படியோ இருக்கிறது ஆகவே கவலையை உன் நினைவில் இருந்து அகற்று என்று அந்த கோஷா அணிந்தவரின் வரிகள் மட்டும் அலையென காதுகளில் மோதிக் கொண்டிருந்தன. அவுலியாக்கள் நம் மீது கொண்டுள்ள அன்பும் அக்கறையும் பெற்றோர்கள் நம்மீது கொண்டுள்ள அன்பை விட பரிசுத்தமானது என்பதற்கு இந்த நிகழ்வே போதுமானது.

**தர்கா இதழ் வாசகி**
**ரோமான் குஷ்தர் ஜித்தா - சவூதி அரேபியா.**

---

பொக்கிஷம்

# காயிதே மில்லத் இஸ்மாயீல் சாயபு

பூமி அதிராத நடை... புன்முறுவல் பூந்தோட்டம் போட்ட முகம்... கருணை நிலா ஒளி வீசும் விழிகள்... மென்மையான குரல்... எந்த நிலையிலும் கண்ணியம் தவறாத சீர்மை இது தான் காயிதே மில்லத் இஸ்மாயீல் சாயபு.

எங்கள் தமிழாசிரியர் அன்றைக்கு ஒரு நாள் - வகுப்பில் தமிழ்ப் பாடம் நடத்துவதற்குப் பதிலாக அரசியல் பேசினார்.

“எத்தனையோ தலைவர்கள் தமிழுக்காக உயிர் விடுகிறேன் என்கி றார்கள். ஆனால் இந்தியாவின் ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கலாம் என்ற விவாதம் டெல்லியிலே வந்திருக்கிறது. வடக்கே உள்ளவர்கள் இந்தி தான் ஆட்சி மொழி என்கிறார்கள். தெற்கே உள்ளவர்கள் ஆங்கிலம் தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் ஒரு ‘சாயபு’தான் ‘எங்கள் தமிழ் மொழி எல்லா வளமும் பெற்ற மொழி. அதுவே இந்தியா வின் ஆட்சி மொழியாக இருக்கத் தகுதி உள்ளது’ என்று பேசியிருக்கிறார். அவர் இஸ்மாயீல் சாயபு. நல்ல தமிழ் பேசும் நெல்லையைச் சார்ந்த பச்சைத் தமிழர்!”

கேரளத்திலுள்ள மஞ்சேரி (இப்போ தைய மலப்புரம்) நாடாளுமன்றத் தொகுதிக்குள் நுழையாமலேயே காயிதே மில்லத் வெற்றி பெற்றிருந்த நேரம். அவரைச் சந்திக்க நினைத்தேன். எக்கச் சக்கமான கூட்டம். மலர் மாலை, கைத்தறித் துண்டு, பட்டாசு வெடிகள் இவையெல்லாம் இருக்கும் என நினைத்து அவரது இல்லத்தை அடைந்த போது, அதிகாலை நேரத்து ஏரிக் கரைபோல அமைதியாக இருந்தது அவரது வீடு.

என்னைப் பார்த்ததும் அவர் கேட்ட முதல் கேள்வி: “பசியாறிட்டீங்களா?”

‘பசியாறுதல்’எனும் தமிழ்ச் சொல்லின் அழகு பற்றி வியந்து போனேன். “உணவு உண்பதற்கு இப்படி ஒரு சொல்லா உங்கள் பகுதியில்?” என்று கேட்டேன்.

“உணவு உண்டீர்களா என்பதற்காக அல்ல இந்தச் சொல்! ‘பிரேக் ஃபாஸ்ட்’ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரானது இந்தச் சொல். காலை உணவு உண்டீர்களா என்று கேட்பதற்குத்தான் இந்தச் சொல் பயன்படுத்தப்படும்” என்று பதிலுரைத்தார்.

எழில் எழிலான தமிழ்ச் சொற்கள் எத்தனை நெல்லைப் பகுதியில் வழங்கு கின்றன என்று அவர் அடுக்கிக் கொண்டே போனார். ‘புட்டிங்’ என்ற சிற்றுண்டி குறித்த சொல்லுக்கு ‘வட்டில் அப்பம்’ என்ற சொல் இருப்பதாக அவர் கூறியபோது, இமை இரண்டும் சேரா வண்ணம் நெடுநேரம் அவரைப் பார்த்த படி இருந்தேன்.

நபிகள் நாயகம் விழா! காயதே மில்லத் பேச இருக்கிறார். அதற்கு முன், திராவிட இயக்கத்தைச் சார்ந்த ஒருவர் பிள்ளையார் பற்றிய கதையைக் கூறிக் கேலி செய்தார். காயிதே மில்லத் தமது பக்கத்தில் இருந்தவரிடம் ஏதோ சொல்ல, பேச்சாளரின் பேச்சு அதோடு முடிக்கப் படுகிறது!

காயிதே மில்லத் பேசும்போது சொன்னார்... “இது புனிதமான மீலாது விழா மேடை. இதில் நபிகள் நாயகத்தின் சிறப்பு, இஸ்லாத்தின் மேன்மை பற்றிப் பேச மட்டுமே அனுமதிக்கப்படும். பிற மதத்துக் கடவுள்களைப் பற்றிக் கேலி செய்து பேசக்கூடாது. இஸ்லாமிய மார்க்கம், ‘பிற மதத்துக் கடவுள்களைப் பற்றி கேவலம் செய்து பேசாதீர்கள்’ என்று கூறியிருக் கிறது.”

இத்தகைய பண்பு நலன்கள் கொழித்துச் செழித்து இருந்த காரணத் தால்தான் அவர் ‘கண்ணியமிகு காயிதே மில்லத்’ என அழைக்கப்படுகிறார்.

(புகழ் மனிதர்களின் தொடர் முடிகிறது. ஏன்? புகழுடம்பு எய்திய மாந்தர்களையே புகழ் மனிதர் என எண்ணுவதால்!)

**நன்றி: ஆனந்த விகடன் 10.02.2010, பக்:82**

---

## நூல் ஆசிரியருக்கு பாராட்டும், பொற்கிழியும்.

ஈரோடு நகர தர்காக்கள் ஒரு ஆய்வு நூலின் ஆசிரியை ஆலி ஜனாபா ரமீஸா பேகம் சாஹிபா அவர்களுக்கு பாராட்டும் பொற்கிழியும் வழங்கும் விழா சாஹெப் உருஸ் விழா மோடையில் நடைபெற்றது.



தர்கா இதழ் சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கை கொண்ட நூட்களை வெளியிடும் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதமாக பாராட்டும் பொற்கிழியும் வழங்க வேண்டும் என முடிவு செய்ததில் ஈரோடு தர்காக்கள் ஒரு வரலாற்று ஆய்வு என்ற சிறப்பான நூலை எழுதியதற்காக நூலின் ஆசிரியை அவர்களை பாராட்டி 24.04.2010 சாஹெப் வலியுல்லாஹ் உருஸ் விழா மேடையில் பொற்கிழி வழங்கப்பட்டது. விழாவில் அவர் கழந்து கொள்ள இயலாததால் அவரது சார்பாக நூல் வெளியீட்டாளர் ஆலி ஜனாப் முஹம்மத் அர்ஷத் M.A அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

நூல் வெளிவர அவருக்கு பெரிதும் உறுதுணையாய் இருந்த ஆலி ஜனாப் முஹம்மத் அர்ஷத் M.A அவர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.

# கட்டுரைப் போட்டி முடிவுகள்...!

அன்பார்ந்த தர்கா இதழ் வாசக நேசர்களே...!

நாம் தயங்கிக் கொண்டே கட்டுரைப் போட்டிகள் அறிவிப்பு செய்தோம். ஆனால் நம் தயக்கத்தை போக்கும் வண்ணம் சந்தோஷமாக கட்டுரைப்பேட்டிக்கு பல கட்டுரைகள் வரப்பெற்றோம். அவற்றை குழு மூலம் ஆய்வு செய்தோம். மாணவர்கள் அதிகப்படி கலந்து கொண்டதும் குறிப்பாக திருப்பூர் சிராஜுல் முனீர் மதரஸாவின் பேராசிரிர் யூசுப் ஹஜ்ரத் அவர்கள் மாணவர்களுக்கு ஆர்வமூட்டி கலந்து கொள்ளச் செய்ததில் நாம் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

மாணவர்கள் குறிப்பாக வஹ்ஹாபிஸம் இஸ்லாத்திற்கு நேர் மாற்றமானது என்ற தலைப்பில் ஆணித்தரமாக கட்டுரை வரைந்தது நமக்கு ஆச்சரியமான மகிழ்ச்சியை தந்தது.

மௌலவி கமருத்தீன் அவர்களுக்கு முதல் பரிசும், அடியக்கமங்களத்தைச் சேர்ந்த சித்தி ஜன்னதுல் பரீனா - என்ற மாணவி அவர்கள் தீனை ஹயாத்தாக்கிய முஹ்யித்தீன் எஜமான் என்ற கட்டுரையை எம்.பில். தீஸிஸ் ஆய்வுக் கட்டுரையைப் போன்று சமர்பித்திருந்தது பாராட்டுக்குரியது. அதை ஒரு கையேட்டு நூலாகவே வெளியிடும் அளவுக்கு விரிவாக இருந்தது. எனவே அவருக்கு இரண்டாம் பரிசும், மூன்றாவது பரிசுக்காக கட்டுரையைத் தேர்ந்தெடுக்க திணறித்தான் போனார்கள் நம் கட்டுரை ஆய்வுக் குழுவினர்.

முடிவாக மூன்றாம் பரிசை திருப்பூர் சிராஜுல் முனீர் மதர்ஸாவைச் சேர்ந்த மௌலவி முஹம்மத் யாஸீன் - ஐந்தாம் ஜும்ரா, மௌலவி முஹம்மத் நிஸார் - ஐந்தாம் ஜும்ரா, மௌலவி தாஜுத்தீன் - இரண்டாம் ஜும்ரா ஆகிய மூன்று மாணவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப் படுகிறது.

பரிசு பெற்றவர்களுக்கு அவர்களின் கட்டுரையின் நிறை குறைகளைச் சுட்டிக் காட்டி அவர்களுக்கு கடிதமும் அனுப்பப் பட்டது.

இவ்வளவுக்குப் பிறகும் பொள்ளாச்சியிலிருந்து ஆலி ஜனாப் பீர் முஹம்மத் அவர்கள் எழுதிய தீனை ஹயாத்தாக்கி முஹ்யித்தீன் எஜமான் அவர்களின் கட்டுரையை தவிர்க்க முடியவில்லை. எனவே அவர்களுக்கு ஆறுதல் பரிசை தேர்ந்தெடுத்தோம்.

பரிசுகள் சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் உருஸ் மேடையிலே வழங்கப்பட்டது என்பதையும் கலந்து கொள்ள இயலாதவர்களுக்கு போஸ்டல் மூலம் அனுப்பிவைக் கப்பட்டது என்பதையும் பரிசு பெற்றவர்களுக்கு நம் தர்கா இதழின் கட்டுரைப் போட்டி தேர்வுக் குழுவினரின் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். (ஆ____ர்)

## முதல் பரிசு பெற்ற கட்டுரை!

## வஹ்ஹாபிஸம் இஸ்லாத்திற்கு நேர் மாற்றமானது...!

(கட்டுரையாளர்.... மௌலவி கமருத்தீன் ; மாணவர் : திருப்பூர் அஸ்ஸிராஜுல் முனீர் அரபிக் கல்லூரி, ஆறாம் ஜும்ரா.)

உலகை உய்விக்க அருள் பிளம்பாய் அவதரித்த நபிகள் நாயகம் முஸ்தஃபா ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீதும் அவர்களது கிளையார்கள், தோழர்கள், இறைநேசச் செல்வர்கள் அனைவர்களின் மீதும் கருணையும் ஈடேற்றமும் உண்டாவதாக!

திடனாக அவர்கள் தாம் குழப்பவாதிகள். ஆனால் அதை அவர்கள் உணர்ந்து கொள்ள மாட்டார்கள்.

**அல்குர்ஆன் - 2:12**

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்... வருங்காலத்தில் என் சமூகத்தாரது மத்தியில் பிரிவினை வாதங்களும், கருத்து மோதல்களும் உருவாகும். அதில் ஒரு கூட்டத்தாரது சொற்கள் மிக அழகாகவும், கவர்ச்சியாகவும், ஆனால் அவர்களது செயல் மோசமாகவும் வழிதவற வைக்கக் கூடியதாயிருக்கும். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள் ஆனால் அது அவர்களது தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. நாணை விட்டுச் செல்லும் அம்பைப் போல் அவர்கள் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிடுவர். அம்பு மீண்டும் நாணை நோக்கி வந்தாலும் வரலாம். ஆனால் அவர்கள் மார்க்கத்தின் பால் திரும்பவே மாட்டார்கள்.

அவர்கள் பிறப்பிலும் நடைமுறை செயல்களிலும் மகா மோசமானவர்களாக இருப்பார்கள். குர்ஆனின் பக்கமும், மார்க்கத்தின் பாலும் வருமாறு மக்களை அழைத்திடுவர். ஆனால், அவர்களுக்கும் மார்க்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இருக்காது. யார் அவர்களுடன் போராடுவாரோ அவர் அல்லாஹ்விற்கு மிக நெருங்கியவாறு இருப்பர். அவர்களுடைய அடையாளம் என்ன? இறைத்தூதரே! என நபித்தோழர்கள் வினவ - மொட்டை அடித்திருப்பது அவர்களின் அடையாளமாகும் என கூறினார்கள்.

**அறிவிப்பாளர் : அபூ ஸயீதுல் குதூரி ரலியல் லாஹு அன்ஹு, நூல் : மிஷ்காத்,பக் : 308.**

வஹ்ஹாபிஸம் இஸ்லாத்திற்கு நேர் மாற்றமானது என்ற தலைப்பைப் பார்த்தால் எல்லோருக்கும் எப்படி என்று தோன்றும்.

முதலில் நாம் வஹ்ஹாபிகள் என்று எல்லோரும் கூறுகிறார்களே! அவர்கள் யார்? அவர்கள் கொள்கை என்ன? என்பதை அறிய வேண்டும். அதற்குப் பின் வஹ்ஹாபிஸம் இஸ்லாத்திற்கு நேர் மாற்றமானதா? இல்லையா? என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். மாற்று மத சமுதாயத்தவர்கள் நம்மை நோக்கி முஹம்மதியர்கள் என்றே அழைக்கிறார்கள். காரணம், நாம் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் பின்பற்றுவதால் தான். அது போல் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தியைப் பின்பற்றியவர்களை வஹ்ஹாபிகள் என்று கூறுவார்கள்.

யார் இந்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப்? ரஸுல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும மூன்று கோத்திரத்தாரை வெறுத்தனர். அவர்கள் யகீப், பனூஹனீஃபா, பனூ உமைய்யா வாகும். **நூல் : திர்மிதி.**

இம்மூன்று கோத்திரத்தினரில் பனூ ஹனீஃபாவைச் சேர்ந்தவரே முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப். இவர் சிறு வயதில் ஸஜ்ஜாஹ், அஸ்வத் அஸன், தல்ஹா, அஸதீ, முஸைவத்துல் கத்தாப் போன்றோரின் நூல்களை விரும்பி மனதில் பதியவைப்பார். இவ்வாறே தம் மனதில் நபி எனவும் எண்ணிக் கொண்டிருந்தார். இதை சிறுக சிறுக தம் மனதில் இருந்து வெளிப்படுத்தி தமது கொள்கையை பரப்ப ஆரம்பித்தார். பின்பு இவரின் கொள்கையை ஏற்று இவர் ஊருக்கு வந்து குடிபெயருபவரை முஹாஜிர் என்றும், இவரிடம் பைஅத் பெற்று ஹஜ் செய்தால் முழுமையான ஹாஜி எனவும் போற்றிப் புகழ்ந்தார்.

ஹிஜ்ரி 1218ல் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபை பின்பற்றுவோர் மக்காவை கைப்பற்றிவிட்டனர். இதை அறிந்து முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் அப்ஜதுல் உலூம் (கிதாபுத் தௌஹீத்) என்ற ஒரு நூலை எழுதி தமது மகன் அப்துல்லாஹ்விடம் கொடுத்து வினியோகம் செய்யச் சொன்னார். அந்நூலில் சுன்னத் வல் ஜமாஅத்தினருக்குப் புறம்பான பல மூடக் கொள்கைகளை வகுத்துக் கொடுத்ததோடு தம் காலத்திலிருந்து 60 வருடங்களுக்கு முன் வரையுள்ள சுன்னத் வல் ஜமாஅத்தினரை காபிர்கள் என்றும், முஷ்ரிக்குகள் என்றும் அவர்களை வெட்டுவதும், அவர்களது பொருட்களை கொள்ளை அடிப்பதும் ஹலால் என்றும் எழுதியிருந்தார். இதைப் படித்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபின் ஆசிரியர்களே எதிர்ப்பு தெரிவித்தனர். பின்பு நஜத் தேசத்திலிருந்து படையெடுத்துச் சென்று தாயிப் நகர மக்களையும், புனிதமிக்க ஹரம் ஷரீஃபில் அடைகலம் புகுந்திருந்த உலமாக்களையும், முஸ்லிம்களையும் கொன்று குவித்து அவர்களின் பொருட்களையும் சூறையாடினார்கள். இந்த கொடியவனின் கொடுமைக்கு முற்றுப் புள்ளி சுல்தான் மஹ்மூத்

ஆட்சியில் வைக்கப்பட்டது.

**நூல் : அத்துரருஸ்ஸானிய்யா ; பக் : 32,33**

அதன் பின்பு ஹிஜ்ரி 1303ம் ஆண்டில் இந்தியாவில் காந்திலா என்னும் ஊரில் பிறந்த தப்லீக் என்ற கொள்கையை உருவாக்கிய இல்யாஸ் என்பவரையும் அவரின் கொள்கைகளை நடைமுறைப் படுத்திவரும் தப்லீக்காரர்களையும் வஹ்ஹாபிகள் என்றுக் கூறக் காரணம் என்ன எனப் பார்போமேயானால் இவர்கள் வஹ்ஹாபிகளா? இல்லையா? என்பதை அறிவீர்கள்.

இல்யாஸின் குரு இஸ்மாயீல் தெஹ்லவி ஹஜ்ஜுக்குச் செல்கிறார். அங்கு முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபின் கிதாபுத் தௌஹீத் என்ற நூலைப் பெற்றுக் கொண்டு உருதுவில் மொழிப் பெயர்த்து தக்வியதுல் ஈமான் எனப் பெயரிட்டு வினியோகம் செய்தார். உடனே மக்கா மதீனா அதைச் சுற்றியுள்ள இமாம்களால் இஸ்மாயீல் தெஹலவிக்கு காபிர் என மார்க்கத் தீர்ப்பு வழங்கி ஸுயூபுல் பாரிகா அலா ருஊசில் பாஸிகா (துஷ்டர்களின் சிரசுகள் மீது செலுத்தப்படும் வாள்கள்) என்ற நூலையும் வெளியிட்டார்கள்.

காபிர் என்று பத்வா கொடுக்கப் படும் அளவிற்கு (கிதாபுத் தௌஹீத்) தக்வியதுல் ஈமான் என்னும் நூலில் கூறப்பட்ட விஷயம் என்ன என்ற கேள்வி எல்லோர் மனதிலும் தோன்றும். பதில் தக்வியதுல் ஈமான் என்ற நூலில் கூறப்பட்ட வாசகங்கள்.......

1. ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பரிசுத்த ரௌலா ஷரீஃபை ஜியாரத் செய்வதற்கு மட்டும் போவது ஷிர்க் ஆகும். **பக்:10,40**

2. மனிதர்கள் தம்மில் சகோதரர்கள். எவர் பெரியவரோ அவர் பெரிய சகோதரர். அதே கவனத்தில் ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு பெரிய சகோதரரின் மரியாதையைக் கொடுங்கள். **பக் : 50**

3. ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஷஃபாஅத் செய்வார்கள் என யாராவது நம்புவார்களேயானால் அவன் அசல் முஷ்ரிக்காகவும், மடையனும் ஆவான். **பக் : 25**

4. ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை நாடுவதனால் ஒன்றும் உண்டாகப் போவதில்லை. **பக்:66**

5. ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மறைவான விஷயங்களைப் பற்றிய அறிவு உண்டு அல்லது அறிவார்கள் என நம்புதல் இணை வைத்தலான ஷிர்க் ஆகும். **பக்:7**

இவ்வாறு பல விஷயங்கள் நபிகளாரையும், வலிமார்களையும், நல்லடியார்களையும் தரம்தாழ்த்தி எழுதியதால் உலமாக்கள் ஒன்று கூடி அப்துல் வஹ்ஹாப் நஜ்தியையும் அவரின் கொள்கைகளைப் பின்பற்றிய தப்லீக் தலைவர்களையும் காபிர்கள் என்று முத்திரையிட்டார்கள்.

இது மட்டுமல்ல வஹ்ஹாபிகளின் இரண்டாம் தலைவர் ரஷீத் அஹ்மத் கங்கோஹி தன்னுடைய பத்வா கிதாபான பதாவாயே ரஷீதிய்யாவில் சஹாபாக்களின் கப்ருகளை இடித்த, சுன்னத் வல் ஜமாஅத் உலமாக்களைக் கொன்ற கொடூரன் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தியைப் பற்றி கூறுகிறார்.

**கேள்வி :** அப்துல் வஹ்ஹாப் நஜ்தி எத்தகைய மனிதர்?

**பதில் :** முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபை ஜனங்கள் வஹ்ஹாபி எனக் கூறுவார்கள். அவர் நல்லவர். **பக் : 237**

ரஹ்மதுல்லில் ஆலமீன் என்னும் உயர் பதவி ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. மற்ற அன்பியாக்களும், உலமாக்களும் கூட ரஹ்மதுலில் ஆலமீனாக இருப்பார்கள். **பக்:96**

மேலும் நபிமார்களின் முஅஜிஜாக்களை மறுக்கிறார்கள் **பக் : 171**

இதேப் போன்று வஹ்ஹாபிகளின் மூன்றாம் தலைவர் கலீல் அஹ்மத் அம்பேட்வி எழுதியுள்ள நூட்கள் அஷ்ரப் அலீ தானவி, ஜகரிய்யா, காஸிம் நானோத்வி, போன்றோரின் நூட்களில் ஷைத்தான் சவூதியின் இரு கொம்புகளில் ஒரு கொம்பான முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபின் நச்சுக் கொள்கையை எழுதியுள்ளார்கள். இது முழு சமூதாயத்திற்கும் இலகுவாக சென்றடைய வேண்டும் என எண்ணியே தப்லீக் என்ற தொழுகைக்கு அழைக்கும் ஒரு போலி இயக்கத்தை இல்யாஸ் ஆரம்பித்தார். தன்னைப் பற்றி அவர்களே கூறுகிறார்கள்.

தப்லீகின் மற்றொரு தலைவரான மன்சூர் நுஃமான் என்பவர் கூறும்போது நாங்கள் எங்களைப் பற்றி மிகத் தெளிவாக சொல்கிறோம். நாங்கள் பக்கா வஹ்ஹாபிகளாக இருக்கிறோம்.

**ஆதாரம்: சவாயிகே மௌலானா யூசுப்:பக்:190**

இதைக் கேட்ட ஜகரிய்யா மௌலானா ஆவேசத்துடன் கூறுகிறார். மௌலானா அவர்களே! நான் உங்களைவிட மிகப் பெரிய வஹ்ஹாபியாக இருக்கிறேன்.

**ஆதாரம் : அஷ்ரஃபுல் சவாயிக் : பக் :192**

இப்படி தங்ளை வஹ்ஹாபிகள் என்று விமர்சனம் செய்திருக்கிறார்கள் என்றால் இவர்களையும் இவர்களைப் பின்பற்றுபவர்களையும் நாம் எப்படி அழைப்பது? அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத்தினர்கள் என்றா? இஸ்லாத்திற்கு நேர் மாற்றமான வஹ்ஹாபிகள் என்றா? என்ற கேள்வியின் பதில் உங்கள் விருப்பத்தில் உள்ளது.

ஆனால் இவர்களின் கொள்கைகளை அறியாமல் பாமரமக்களை பாதையின் ஆரம்ப நிலையையும் இறுதி நிலையையும் அறிவிக்காமலும், அறியாமல் கண்ணிருந்தும் குருடர்களாக ஆக்கி வழிகேட்டின் பாதையில் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் தடுக்கும் சக்தி இருந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம். உண்மை நிலை தெரிந்தும் மறைத்திருந்தால் அல்லாஹ்விடம் நம் நிலை என்னவாகும் என்பதை நாம் அறிவோம். ஆகையால், தெரியாதவர்களுக்கு உண்மையை எடுத்துக் கூறி அவுலியாக்களின் வஸீலாவால் ரஸூலின் அன்பைப் பெற்று அல்லாஹ்வை அடைவோமாக! ஆமீன்!! பி ஜாஹே சையிதுல் முர்ஸலீன்!!!

## தஞ்சையில் நபிகளாரின் மீது நேசத்தை வெளிப்படுத்தும் மதீனா பள்ளியின் மக்தபு மாணவமணிகள் மீலாது ஊர்வலம்

தஞ்சை தரணியில் மீலாது நாளன்று நபி பெருமானாரின் மீதுள்ள முஹப்பத்தை அன்பை வெளிப்படுத்தும் வண்ணம் மதீனா பள்ளி முஹல்லா முதவல்லி ஆலி ஜனாப் அல் ஹாஜ் முஹம்மத் சிராஜுத்தீன் அவர்களின் தலைமையில் ஹாபிள் காஜா சூஃபி காதிரி பேஷ் இமாம் ஹஜ்ரத் அவர்கள் முயற்சியில் பள்ளியில் படிக்க வரும் குழந்தைகள் பெரும் திரளாக நாரயே தக்பீர்! அல்லாஹு அக்பர்!! நாரயே ரிஸாலத்! யா ரஸூலல்லாஹ்!! பிறை கொடி பிடித்து நபி வழி நடப்போம்! முழக்கங்களுடனும், சாந்தி சமாதானம் மத நல்லிணக்கம் நன்னடத்தை மேலோங்க, பெற்றோரையும் பெரியோரையும் மதிப்போம்...! அன்பு பண்பு மனித நேயம் போதிக்கும் அவுலியாக்கள் வழியே இஸ்லாம் வழி...! இந்தியா எங்கள் தாய் நாடு...! இஸ்லாம் எங்கள் வழிபாடு...! என்ற நன்னெறிகளையும் எடுத்துக் காட்டும் வண்ணம் காலை 7மணிக்கு ஊர்வலமாக புறப்பட்டு விசிறிக்கார முஹல்லா, கீழவாசல், மீன்மார்கெட் வழியாக கொண்டிராஜ பாளையம் தைக்காலுக்கு வந்தடைந்தது. அங்கு பாரம்பரியமாக ஜியாரத்துக்கு வைக்கப்பட்ட நபிகள் கோமான் கண்மணி நாயகம் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் திருமுடி தரிசனத்திற்கு வைத்திருந்ததை தைக்கால் சஜ்ஜாதா நிஷீன் சையத் ஷாஹ் நிஃமதுல்லாஹ் சக்காப் தாஜீம் தரக் காதிரி ஷுத்தாரி அவர்கள் ஜியாரத் செய்வித்தார்கள். மௌலூது ஓதி நபிகளார் மீது பாமாலை கீதங்களும் உருது நஅதே ஷரீஃபும் பாடி ஃபாத்திஹா ஓதி தபர்ருக் வழங்கப்பட்டது. முன்னதாக தைக்காலில் சையத் ஷாஹ் ஷாஹ் தோஸ்த் முஹம்மத் சக்காப் தாஜீம் தரக் காதிரி என்கிற சையத் மத்தீன் அஹ்மத் சக்காப் வறவேற்று தபர்ருக் வழங்கி அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள்.

முதன் முறையாக குழந்தைகள் ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்த மதீனாபள்ளி முதவல்லியும், பேஷ் இமாம் ஹஜ்ரத் மற்றும் முஹல்லா வாசிகள், ஜமாஅத்தார்கள் எல்லோரும் பாராட்டுக்குரியவர்கள்.

சென்ற இதழில் தர்கா ஜியாரத் பயணம் பகுதியில் பரங்கிப்பேட்டை காட்டானை அப்பா வலியுல்லாஹ் அவர்கள் பிறந்தது எஜமான் காதர் வலி பாதுஷா நாயகத்தின் கராமத்தால் என்பதை படித்த, எஜமான் நாகூர் நாயகத்தின் குலவழித் தோன்றல் தர்கா பரம்பரை டிரஸ்டி ஆலி ஜனாப் செய்யிது அபுல் பத்தாஹ் சாஹிப் அவர்கள் நாகூர் ஆண்டவரின் கராமத்தால் பிறந்து வலிமார்களாக விளங்கிய நாதாக்களை குறிக்கும் சிறு கட்டுரையை எழுதி அனுப்பியுள்ளார்கள். கந்தூரி நேரத்தில் நாகூர் ஆண்டகையின் பொற்பாத கமலங்களுக்கு தர்கா இதழ் சாபுவுக்கு நன்றி கூறிய வண்ணம் பணிவுடன் சமர்பிக்கிறது. (ஆ__ர்)

# கஞ்சே சவாயி நாகூர் நாயகத்தின் கராமத்துகள்...!

அல்லாஹ் போதுமானவன்!

பேரன்புமிக்க சகோதரர் ஜனாப் செய்யது அஹமத் அவர்களின் சமூகத்திற்கு நாகூர் பாதுஷா நாயகத்தின் குலவழித் தோன்றல் தர்கா பரம்பரை டிரஸ்டி செய்யது அபுல் பத்தாஹ் சாஹிப் வின் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹு...

## ஹஜ்ரத் முஹம்மத் கௌஸ் குவாலியர் நாயகத்திடம் தீட்சை:

எங்கள் பாட்டனார், தென்கிழக்காசியாவின் ஜோதி நாகூர் நாயகம் அவர்கள் தம் 18ம் வயதில் ஞான குருவைத் தேடி குவாலியர் சென்று ஹஜ்ரத் முஹம்மது கௌஸ் குவாலியர் நாயகத்திடம் தீட்சை பெற்று 10வருட காலம் அங்கு தங்கி இருந்துவிட்டு தேச சஞ்சாரம் மூலம் தீனை பரப்ப புறப்படும் முன் அவர்களின் ஞான குருநாதர் அவர்கள் ஷாஹுல் ஹமீத் நீர் திருமணத்தில் நாட்டம் கொள்ளாமல் இருக்கிறீர். உமக்கு ஒரு ஆண் சந்ததி (வாரிசு) வரவேண்டி உள்ளதே என்று கேட்கிறார்கள். அதற்கு பாதுஷா நாயகம் அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ் அதனை வெளியாக்கித் தந்தருள்வான் என்று கூறி விடை பெற்று கால்நடையாக பாகிஸ்தான் லாகூருக்கு விஜயம் செய்து அங்கு தங்குகிறார்கள். அங்கு அவர்களுக்கு சேவகம் செய்ய குவாலியர் நாயகம் அவர்கள் பாதுஷா நாயகத்துடன் அனுப்பிய 404 தாபேதார்கள் இருந்தும் லாகூர் வாழ் செல்வந்தர் காஜி நூருத்தீன் முஃப்தி அவர்கள் பாதூஷா நாயகத்திற்கு பெரிதும் ஒத்துழைத்து சேவைகள் செய்து நாயகம் அவர்களின் அன்பையும், அருளையும் பெறுகிறார்கள். கடைசியாக தனக்கு எல்லாம் இருந்தும் பிள்ளைபாக்கியம் மட்டும் இல்லை என்று கண்ணீர்விட்டு அழுது மன்றாடுகிறார்கள்.

கருணையே வடிவான பாதுஷா நாயகம் அவர்கள் அவர்களின் பாரம்பரிய வமிசாவழியை அறிந்து தன்னிடம் இருந்து வெளிப்பட வேண்டிய ஹஜ்ரத் செய்யது முஹம்மது தாதா நாயகம் வெளிவரக்கூடிய நேரம் வந்துவிட்டதை அறிந்து அவர்களிடம் முதலில் உங்களுக்கு பிறக்கக் கூடிய பிள்ளை என் பிள்ளை அதன் பிறகு உங்களுக்கு வரக்கூடிய பிள்ளைகள் உங்களுக்கே உரியது. முதலில் உங்களுக்கு பிறக்கும் குழந்தைக்கு செய்யது முஹம்மது யூசுப் என்று பெயர் சூட்ட வேண்டும் என்றும், அப்பிள்ளை 7 வயதாகும் போது என்னைப்பற்றி கேட்கும், அப்போது நான் உங்களிடம் இப்போது தரும் மிஸ்வாக்கை அப்பிள்ளையிடம் கொடுத்தனுப்பவும். அப்போது என்பிள்ளை செய்யிது முஹம்மது யூசுபை எதிர்பார்த்து மக்கா ஹரம் ஷரீஃபில் நான் இருப்பேன் என்று கூறி அவர்களுக்கு தாம்பூலம் மூலம் பிள்ளை பாக்கியம் அருள்கிறார்கள்.

காஜி நூருத்தீன் முப்ஃதி அவர்கள் தன்னுடனேயே 40 நாட்கள் இருக்கச் செய்துவிடுகிறார்கள். பிறகு வீட்டிற்கு சென்ற முஃப்தி அவர்கள் தன் மனைவி பீவி ஹாஜிரா அவர்கள் கருதரித்துள்ளதை கணவரிடம் கூறுகிறார்கள்.

இது பற்றிய செய்திகள், சம்பவங்கள் தெளிவாக 1900ல் வெளியிடப்பட்ட கஞ்ஜுல் கராமாத் என்கிற நாகூர் நாயகம் அவர்களின் சரித்திர புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பாதுஷா நாயத்திடம் குழந்தை பாக்கியம் வேண்டிய நாதாக்கள்:

தாங்கள் என்பார்வைக்கு அனுப்பிய பிரசுரத்தைப் பார்த்தேன். இது போல் எங்கள் பாட்டனார் பாதுஷா நாயகம் அவர்கள் சுமார் 200வருடங்களுக்கு முன் வாழ்ந்த இறை நேசச் செல்வர் அல்லாமா அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (கீழக்கரை) அவர்கள் நாகூர் ஷரீஃப் வந்து பாதுஷா நாயகத்தின் பிரதான வாயிலில் இருந்து தனக்கு இரு பிள்ளை வேண்டும் என்றும் அந்தபடி பிறக்கப் போகும் இரண்டு பிள்ளைகளுக்கும் தங்களின் பெயரையே வைப்பேன் என்று கூறி துஆ கேட்டு இரண்டு பிள்ளை பெற்று, சொன்னபடி நாகூர் நாயகத்தின் பெயரான அப்துல் காதிர் என்றும் ஷாஹுல் ஹமீது என்றும் பெயரிட்டு மகிழ்ந்தார்கள்.

இதுபோல் கீழக்கரையை சேர்ந்த முஹம்மது சதக் என்பாரை அழைத்து திருமணம் செய்யச் சொல்லி உமது வழியில் பல இறைநேசச் செல்வர்கள் தோன்றுவார்கள் என்று துஆ செய்கிறார்கள். இவர்களின் பேரர் தான் சதகதுல்லாஹ் காதிரி, தைக்கா சாஹிபு, மாப்பிள்ளை லெப்பை ஆலிம், கல்வத் நாயகம், ஜல்வத் நாயகம், பல்லாக்கு ஒலியுல்லாஹ், (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோர்கள் ஆவார்கள்.

இதுபற்றி மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் தொகுத்த மவாஹிபுல் மஜீது என்ற அரபி கிதாபில் தெளிவாக உள்ளது.

இதுபோல் பாதுஷா நாயகம் லட்சக்கணக்கான ஆஷிகீன்களுக்கு வேண்டியதை நிறைவு செய்து அனுப்பி வருகிறார்கள். குணங்குடி மஸ்தான் சாஹிபு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாடியது போல்....

**தக்க பெரியோனின் அருள்**
**தங்கியே நிற்கின்ற**
**தவராஜ செம்மேறு அவர்கள்**

இது போல் தான் ஹஜ்ரத் காட்டானை ரலியல்லாஹு அன்ஹு பற்றியும் சுறி இருக்கலாம். எல்லாம் வல்ல அல்லாஹ் நன்கறிவான்.

நாகூர் பாதுஷா நாயகம் அவர்களை சந்தித்து ஜியாரத் செய்ய அல்லாமா சதகத்துல்லாஹ் அப்பாவும், அவர்களின் சீடரும், ஹஜ்ரத் மஹ்மூது திப்பி அவர்களும் நாகூர் ஷரீஃப் வந்து சென்றுள்ளார்கள். அப்போது ஹஜ்ரத் சதகத்துல்லாஹ் காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்...

**கருவூரில் தரிக்குமுன்னே**
**குருவுக்கும் குருவானவா**
**அன்னை கருவினில்**
**ஞானத்தைப் பெற்றவா...**

என்று கஸீதா ஓதியிருக்கிறார்கள். இது போல் மஹ்மூது திபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும்....

**தன் நிலை உணர என்**
**குருவாய் வந்தவா**
**தன்னிலை அருள்வோருக்கு**
**முன்னிலையானவா...**

என்று கஸீதா ஓதி துஆ பரக்கத்தை பெற்று சென்றுள்ளார்கள்.

இவை சுமார் 400 வருடங்களுக்கு முன் நடந்த சரித்திர சம்பவம்.

## கரமத்தில் பிறந்த குழந்தை:

இன்னுமொரு சம்பவத்தை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். வலிகள் கோமான் ஹஜ்ரத் கௌதுல் அஃலம் அவர்களின் காலத்தில் பிள்ளை பேறு இல்லாத தம்பதிகளுக்கு புருஷனை அழைத்து தன் முதுகோடு உரசச் சொல்லி பிறக்கக் கூடிய பிள்ளை பெரிய வலியாக இருப்பார் என்று நற்செய்தி கூறுகிறார்கள். அப்படி பிறந்த பிள்ளை தான் ஹஜ்ரத் இப்னு அரபி ரஹ்மதுல்லாஹி அலைஹி.

இது போல் பல வலிமார்களின் கராமத்துக்கள் வரலாற்று நூல்களில் காணக்கிடைக்கின்றன. என் விளக்கத்தை மே மாத தர்கா இதழில் தயவு செய்து வெளியிட வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மே மாதம் 15.05.2010ம் தேதிதான் பாதுஷா நாயகத்தின் வருட கந்தூரி விழா என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

நன்றி! வஸ்ஸலாம்!

**செய்யது அபுல் பத்தாஹ் சாஹிபு,**
**நாகூர், 05.04.2010.**

# இறந்தோருக்கு 3,7,10,40 பாத்திஹாக்களுக்கு நாள் குறித்தல் - ஓர் ஆய்வு

(கண்ணியமிகு ஃபழீலத்துஷ் ஷைகு அஸ் ஸையத் அப்துல் அஜீஸ் மௌலானா குஷ்ஹாலி ஹஜ்ரத் அவர்கள்)

இதுவரை நமக்கு மத்தியில் நம்மோடு கலந்து உறவாடி மறைந்து போய்விட்ட நமது சகோதரர்களது குடும்பத்தினர் தம்மை விட்டு மறைந்தோருக்காக மூன்றாம், ஏழாம், பத்தாம் நாளன்று தங்களின் முன்னோர்களது வழிமுறையைத் தழுவி தமது உறவினர்களையும் அண்டை வீட்டாரையும் அழைத்து அவர்களுக்கு உணவளித்து அவருக்காக பிரார்த்தனையும் செய்து வருகின்றனர். இதே போல இந்த நடைமுறைக்கொப்ப இறந்து போனவரின் நாற்பதாம் நாளன்று இன்னும் விசேஷமாக பெரும் திரளான ஜனங்களை கூட்டியும் உலமாக்களை அழைத்தும் பிரார்த்தனை செய்கின்றனர்.

இன்னும் நாற்பதாம் நாளன்று காலையில் குர்ஆன் கத்தம் நிகழ்ச்சி, மௌலூது நிகழ்ச்சி, முனாஜாத் போன்றவைகளை உலமாக்களைக் கொண்டு ஓதி, பின்னர் பகல்வேளை உணவுக்கு முன் யாஸீன், ஸலவாத், பாத்திஹா போன்றவைகளை அனைவரும் ஒன்றுகூடி ஓதியபின் இறுதியில் ஒருவர் பிரார்த்தனை செய்ய மற்றவர்கள் அனைவரும் ஆமீன் சொல்லி முடிவில் உணவுண்டு விடை பெறுகின்றனர்.

## நாற்பதாம் நாளும் அதன் மகிமையும்!

மேலும் இந்த நாற்பது என்னும் இலக்கம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருப்பதைக் கவனித்த நமது முன்னோர்கள் அதன் பிரயோஜனங்களை எல்லோரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஈஸால் தவாபு என்றும் இந்நற்காரியத்தை வடிவமைத்துத் தந்தனர். உதாரணமாக...

(1) மனிதனுக்கு அவன் தனது பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் வெகு சிரத்தினூடே அவனை சுமந்து வெகு சிரமத்தோடு பெற்றெடுத்தாள். (கர்ப்பத்தில்) அவனைச் சுமப்பதும், அவனுக்கு பால்குடியை மறக்கச் செய்வதும் (மொத்தம்) முப்பது மாதங்களாகும்.

(அதன்பின்) அவன் வாலிபனாகி **நாற்பது** வயதை அடைந்ததும், இறைவா! நீ என் மீதும் எனது பெற்றோர் மீதும் புரிந்த அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்தவும், உனது திருப்தியை பெறக் கூடிய நல்லமல்களை செய்வதற்கும் எனக்கு அருள் பாலிப்பாயாக. இதில் எனக்கு ஒத்தாசை புரிய எனது சந்ததியினரை நன்மை செய்பவர்களாக ஆக்குவாயாக. நிச்சயமாக நான் உன்பால் மீளுபவனாக இருக்கிறேன். இன்னும் திடனாக நான் முஸ்லிமாக இருக்கிறேன் என்றும் கூறுகிறான்.

**சூரா-அல்காஃப், வசனம்-15**

மேற்கண்ட வசனத்தில் **நாற்பது** என்னும் இலக்கமானது மனிதன் தன்னைப் பற்றி உணரத் தூண்டக்கூடிய ஒன்றென்பதாக குர்ஆன் மனிதனுக்கு உணர்த்துவதை இங்கே எண்ணிப்பார்க்க வேண்டும்.

(2) எவனொருவன் **நாற்பது** நாட்கள் தொடர்ந்து தக்பீர் தஹ்ரீமாவுடன் ஜமாஅத்தாக தொழுகின்றானோ அவன் நரகம், நயவஞ்சகம் ஆகிய இரண்டை விட்டும் தூரமாக்கப்படுகிறான்.

**-நபிமொழி**

(3) யார் மதீனா முனவ்வராவில் உள்ள எனது பள்ளியில் **நாற்பது** வேளை தொழுகையை நிறைவேற்றுகின்றாரோ அவருக்கு எனது ஷஃபாஅத் (மன்றாட்டம்) கடமையாகும்.

**-நபிமொழி**

(4) **நாற்பது** நாட்களுக்கு தொடர்ந்து யார் ஹலாலான உணவை உண்ணுகின்றாரோ அவரது பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான்.

**-நபிமொழி**

(5) **நாற்பது** முஃமின்கள் ஒரு இடத்தில் ஒன்று சேர்ந்து இருப்பார்களாயின் அவர்களில் அல்லாஹ்வின் வலி அதிகாரி ஒருவர் இருப்பார். **-நபிமொழி.**

(6) **நாற்பது** நபிமொழிகளை மனனம் செய்பவர் மறுமையில் மார்க்கத்தின் சட்ட அறிஞராக எழுப்பப் படுவார். **-நபிமொழி.**

இதுவரை குர்ஆன் ஹதீஸ் மற்றும் நமது முன்னோர்களது ஆதாரங்களைக் கொண்டு இறந்தோருக்காக ஈஸால் தவாபு செய்வது குறித்து ஏவப்பட்ட நாம் அதனை ஒரு வரைமுறைக்கு உட்பட்டு குர்ஆன், ஹதீஸின் அடிப்படைக்கொப்ப செயல்பட்டு புண்ணியம் அடைந்து கொள்வதற்காகவே நமது முன்னோர்களான இஸ்லாமியச் சிந்தனையாளர்கள் இப்படிப்பட்ட நாட்களை நமக்கு வகுத்தளித்துள்ளனர். இன்னும் ஒரு காரியத்தை செய்யுமுன் அதற்கு ஒருநாள் நேரம் போன்றவைகளை நிர்ணயம் செய்வது அனைவருடையவும் நடைமுறையாக இருக்கும் போது இதற்கு மட்டும் ஆதாரம் வேண்டி நிற்பது அறிவீனமாகும்.

ஆகையால் இந்நன்மையான பலனளிக்க வல்ல இதனை நாமும் செய்து பிரயோஜனமடைய வல்லோனாகிய அல்லாஹ் அவனது ஹபீபான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொருட்டால் அருள் பாலிப்பானாக. ஆமீன் பி ஜாஹே சையிதுல் முர்ஸலீன்.

(ஆதாரம் – எத்திவைப்போம் வாரீர், பக் : 74)

---

**20 ஆம் பக்க தொடர்ச்சி...**

...தரம்மிகு தங்கத் தாரகை தர்கா இதழ் கடந்த வியாழன் அன்று அம்பராம்பாளைத்தில் கண்ணுற்றேன்! படித்து பரவசமடைந்தேன்! மட்டிலா மகிழ்ச்சியடைந்தேன்!

இறைநேசர்களின் கராமத்து என்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்; என்பதில் எந்தவித ஐய்யப்பாடும் இல்லை. தங்களின் தர்கா இதழை எனது அல்-அஜீஸ் ரீடிங் சென்டருக்கு அனுப்பி ஆவண செய்யும்படி அன்புடன் வேண்டுகிறேன். உடன் பதில் - அன்புள்ள

**A.JAINULLABUDEEN,METTUPALAYAM**
*10.04.2010*

**நிறைய விஷயங்கள்...**

எல்லாப் புகழும் இறைவனுக்கே...
அல்லாஹ் ஒருவனே துணை நமக்கு!

தர்கா இதழ் ஆசிரியர் அவர்களுக்கு.... தஞ்சை வட்டம் தீன் இசை செல்வர், இஸ்லாமிய புதுமைப் பாடகர் G.K.சையத் ஹுஸைனின் அஸ்ஸலாமு அலைக்கும்......

இஸ்லாத்தின் அனைத்து மாதங்களின் சிறப்புகள் யாவும் உங்கள் தர்கா இதழ் மூலம் அறிந்தேன்.

கர்பலா, ஒடுக்கத்துபுதன், மீலாதுன் நபி, மெஹபூபே சுப்ஹானி அவர்களின் கியார்வீன், பூரியான் பாத்திஹா, பராத் இரவு, மிஃராஜ் இரவு, லைலதுல் கத்ரு இரவு என நிறைய விஷயங்களையும், அவற்றின் சிறப்புகயையும் தாங்கள் மாதா மாதம் அனுப்பி வைக்கும் தர்கா இதழ் மூலம் தெரிந்தும், புரிந்தும் கொண்டேன்.

புரிந்தும் புரியாமலும், தெரிந்தும் தெரியாமலும்...., கேட்டு,கேட்டுதான் இஸ்லாம் என்பதைப் போல் உங்கள் தர்கா இதழ் மூலம் இஸ்லாத்தின் அனைத்து விஷயங்களும் அறிந்தும் புரிந்தும் கொண்டேன்.

இவ்வளவு சிறப்பான முறையில் நிறைய விஷயங்கள் அறிய புரிய வைத்த உங்கள் தர்கா இதழ் மென்மேலும் அல்லாஹ்வின் அருளைக் கொண்டு வளர வேண்டும். ஆமீன்! யா ரப்பல் ஆலமீன்!! வஸ்ஸலாம்!

**G.K.சையத் ஹுஸைன்**
**அய்யம்பேட்டை** *14.04.2010*

# பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெற்றோர்கள் தூய முஃமின்களே...!

**ஏகத்துவத்தைப் புறக்கணித்து இணைவைப்பில் ஈடுபட்டவர்கள்:**

தங்கள் மனம் போன போக்கில் வாழ்ந்து இணை வைப்பில் ஈடுபட்டு அல்லாஹ்விற்கு மாறு செய்தவர்கள்.

மார்க்கத் தீர்ப்பு: இவர்கள் மறுமையில் அல்லாஹ்வின் தண்டனைக்குரித்தானவர்கள்.

ஏகத்துவக் கொள்கையிலும், இணை வைப்பிலும் ஈடுபடாதவர்கள் :

இவர்கள் இணை வைப்பிலும், அநியாயம், அழிச்சாட்டியங்களிலும் ஈடுபடாதவர்கள். மற்றும் எந்த ஒரு நபியைப் பற்றியும் அறியாதவர்கள். அவ்வாறு அறிந்திருந்தாலும் அதை மறுக்காதவர்கள்.

மார்க்கத் தீர்ப்பு : இக் கூட்டத்தினர்களில் ஒருவர் மரணித்துவிட்டால் இவர்களுக்கு மறுமை நாளில் தண்டனை கிடையாது. இவர்கள் ஜெயம் பெற்றவர்கள் என்று மார்க்க சட்ட நிபுணர்கள் கூறியுள்ளார்கள்.

**ஃபத்ரத் காலம் பற்றி அல்-குர்ஆன்:**

1. நாம் அவர்களுக்கு மத்தியில் தூதரை அனுப்பாதவரை அச் சமூகத்தாரை (நாம்) தண்டிப்போராயில்லை. அல்-குர்ஆன் 17:15

2. உம்முடைய இறைவன் எந்த ஊர்களையும் அவற்றின் தலைநகருக்கு ஒரு தூதரை அனுப்பி, அவர்களுக்கு நம்முடைய வசனங்களை அவர் ஓதிக் காண்பிக்கும் வரை - அழிப்பவனாக இல்லை. அல்-குர்ஆன் 28:59

3. எந்த ஊ(ரா)ரையும் அதற்கு அச்சமூட்டி எச்சரிக்கிறவர்கள் இல்லாமல் - நாம் அழித்ததில்லை. மேலும் நாம் அநியாயம் செய்பவராகவுமில்லை.

**அல்-குர்ஆன் 26:208,209**

4. (நம் தூதராகிய) அவருக்கு முன்பே நிச்சயமாக நாம் அவர்களை வேதனையைக் கொண்டு அழித்திருந்தால், எங்களுடைய இறைவனே! எங்களிடம் ஒரு தூதரை நீ அனுப்பியிருக்கக் கூடாதா? அவ்வாறிருந்தால், நாங்கள் தாழ்மையடைவதற்கும், இழிவடைவதற்கும் முன்னரே உன்னுடைய வசனங்களைப் பின்பற்றியிருப்போமே என்று உறுதியாக அவர்கள் கூறியிருப்பார்கள். **அல்-குர்ஆன் 20:134**

மேற்கூறிய திருவசனங்கள் நபிமார்கள் அனுப்பப்படாத கால நிலையில் வாழ்ந்தவர்களைப் பற்றியும், அவர்களுக்கு நியாயத் தீர்ப்பின் போது அல்லாஹ் அளிக்கக் கூடிய தீர்ப்பைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

இமாமுனா ஷாஃபயி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மத்ஹபின் மார்க்க அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாவது ஒருவன் நபித்துவத்திற்கு முன்போ (அதாவது இஸ்லாம் வெளியாகும் முன்போ) அல்லது இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் படியான (தஃவா) அழைப்பு அவனை அடையும் முன்போ அவன் மரணித்து விட்டால் அவனை ஈடேற்றம் பெற்றவனாகவே கணிக்கப் பெறும். இதே நிலையைத்தான் மற்ற இமாம்களும் கூறுகின்றனர். இது ஃபத்ரத் காலத்தில் வாழ்ந்த மூன்றாவது பிரிவினரைப் பற்றிக் குறிப்பிடுவதாகும்.

**பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெற்றோர்களின் காலம்:**

பெருமானாரின் பெற்றோரின் வரலாறும், அவர்களின் நிலையும் மிகத் தெளிவானதாகும். இவர்கள் வாழ்ந்த காலத்திற்கும், இவர்களுக்கு முந்தைய நபியான ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் காலத்திற்கும் சுமார் 570 வருடங்களுகுக்கு மேல் உள்ளது. இது நீண்ட இடைவெளியாகும்.

அரேபியர்களினிடத்தில் அனுப்பப்பட்ட நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கும், இவர்கள் வாழ்ந்த காலத்திற்கும் இடையே சுமார் 3000 வருடங்கள் இடைவெளி இருந்தது. இது மிக நீண்ட இடைவெளியாகும்.

இக்காலகட்டத்தில் சத்திய சன்மார்க்க சட்டதிட்டங்களை அறிந்தவர்கள், அதை முறையாக பின்பற்றுபவர்கள் இலைமறை காயாக, அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலர் தவிர யாரும் இருக்கவில்லை. இத்தகையவர்களைத் தெரிந்தவர்கள் மிகவும் சொற்பமானர்களே!

இன்னும், இக்கால மக்காவாசிகள் முந்தைய நபிமார்கள் பற்றிய எந்த செய்தியையும் அறிந்திருக்கவில்லை. முஷ்ரிக்குகளுக்கு இது பற்றி அறிவு இல்லை என்பது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தமது தூதுத்துவத்தை எடுத்துரைத்து தன்னை நபியாக ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களிடம் சொன்ன போது, அம்மக்கள் எங்கள் மூதாதையர் சொல்லாத ஒன்றையல்லவா இவர் சொல்கிறார். என்று ஏற்க மறுத்துவிட்டதாக அல்குர்ஆனும், ஹதீஸ்களும் சான்று பகர்கின்றன. இக்காலத்தில் தான் நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெற்றோர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெற்றோர்கள் எவ்வித அட்டூழியங்களோ, அழிச்சாட்டியங்களோ செய்ததாகவும், இணை வைப்பில் ஈடுபட்டதாகவும் எவ்வித வரலாறும், ஹதீஸும் கூறவில்லை. மறுப்பாளர்கள் இதற்குரிய ஆதாரங்களை இன்றுவரை கொண்டுவரவில்லை. இனி கொண்டும் வரமுடியாது. ஆதாரம் இருந்தால்தானே கொண்டு வருவதற்கு? அவர்கள் கூறும் வெற்றுக் கூற்றுகளுக்கு உரிய பதிலை ஆதாரத்துடன் அடுத்த பாகத்தில் இன்ஷா அல்லாஹ் விளக்குவோம்.

ஆக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெற்றோர்கள் ஃபத்ரத் காலத்தில் வாழ்ந்த மூன்றாவது கூட்டத்தினர்களான ஜெயம் பெற்ற கூட்டத்தினர்களைச் சார்ந்தவர்கள் என்பது புலனாகிறாது. அல்ஹம்து லில்லாஹ்!

**உயர்ந்த குலத்தில், பரிசுத்த வமிசத்தில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்:**

நமது கண்மணி நாயம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை அல்லாஹ் மிக உயர்ந்த குலத்தில், பரிசுத்தமான வமிசத்தில், தேர்ந்தெடுத்து அனுப்பினான். இதைப் பற்றி அல்லாஹ் தன் திருமறையில் கூறும்போது

நீங்கள் நிற்கும்போது உங்களையும் (இறைவனை) வணங்குவோர்களிடையே நீங்கள் புரண்டு வந்ததையும் அ(வ்விறை)வன் பார்க்கிறான்.

அல்-குர்ஆன் : 26:218,219.

**நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறும்போது...**

1. நான் நபியாக அனுப்பப்படும் வரை ஆதமுடைய மக்களில் மிகச் சிறந்தோர் மத்தியிலே நான் காலங்காலமாக அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தேன்.

**அறிவிப்பாளர் :** ஹஜ்ரத் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். **நூல் :** புகாரி.

2. நான் சிறந்தோர் வழியாகவே வந்துள்ளேன்.

**அறிவிப்பாளர் :** ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். **நூற்கள் :** தப்ரானீ (கபீர்) ஹாகிம், பைஹகீ (தலாயில் நூபுவ்வா)

3. மக்கள் இருபிரிவினராக பிரிகின்றபோது அவற்றில் சிறந்த பிரிவில் என்னை இறைவன் அமைத்தான்.

**அறிவிப்பாளர் :** ஹஜ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். **நூல் :** பைஹகீ (தலாயிலுன் நுபுவ்வா)

**நபிகளாரின் சிறப்புகள் தொடரும்...**

**ஆக்கம் : அப்ஜலுல் உலமா குளம் ஜமால் முஹம்மது - காயல்பதி**



# علم القرآن يعنى تفسير القرآن

# திருமறையின் தெளிவுரை

**உருது மூலம் : ஹகீமுல் உம்மத் அஹ்மத் யார்கான் ரஹ்மதுல்லாஹி அலைஹி --- தமிழில் : மௌலவி ஹாபிஸ் அப்துர் ரஜ்ஜாக் காதிரி கூ:.பி**

## யாரை வலியாக ஏற்பது...?

கடந்த இதழில் யாரை வலியாக ஏற்க கூடாது என்பதின் விளக்கத்தை மூன்று வகையாக தெளிவுபடுத்தினோம். இந்த இதழில் யாரை வலியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதனை குறித்து விளக்குகிறோம்.

## நான்காம் வகை :

எவரையாவது அல்லாஹ்வின் அடியார் என்றும் அல்லாஹ்வின் கட்டளைப்படியே அவர் நமக்கு உதவுகின்றார் என்றும் கருதி அவரிடம் உதவி தேடுதல்.

(1) இறைவா உன் புறத்திலிருந்து எங்களுக்கொரு வலியை ஆக்குவாயாக. உன் புறத்திலிருந்து எங்களுக்கு உதவி புரிபவரை ஆக்குவாயாக.

(2) உங்களின் வலி (உதவியாளர்) அல்லாஹ்வும், அவன் ரசூலும், தொழுகையை நிலை நாட்டி, ஜக்காத்தையும் வழங்கிவருபவரும், ஈமான் கொண்ட முஃமின்களும் தான்.

(3) முஃமினான ஆண்கள், பெண்கள் சிலர், சிலருக்கு வலியாவார்கள்.

மேற்கண்ட வசனங்களில் உதவியாளர் வலி எனும் பொருளில் வரும் அனைத்து வசனங்களிலும் நான்காம் வகையின் விளக்கத்தை காண முடியும். இவ்வகையான எண்ணத்துடன் உதவி தேடுதல் என்பது குர்ஆன் நமக்கு கற்றுக் கொடுக்கும் வழிமுறையாகும். இதில் எவ்வித தவறும் இல்லை. இறைவனே நமக்கு இந்த வலிமார்களை உதவியாளர்களாக காட்டித் தருகிறான். இதன் நோக்கம் நாம் இவர்களின் மூலமாக இறைவனின் உதவியையும், அருளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே இறைவனின் விருப்பமாகும்.

அல்லாஹ்வையன்றி மற்றவர்களை வலியாக ஏற்க கூடாது என தடை வரும் வசனங்களில் கூறப்படும் நோக்கம் முதல் - இரண்டாவது - மூன்றாவது வகையின் தவறான எண்ணமும், கொள்கையுமாகும்.

ஆனால் நான்காவது வகையில் இறைவனின் வலியாக யாரை ஏற்பது என்ற விளக்கத்தில் குர்ஆனின் வசனங்களே ஏராளமான சாட்சிகளாக இருப்பதால் இவ்வகையான எண்ணத்துடன் வலிமார்களின் ஒப்புக் கொள்ள வேண்டும். இதை மறுப்பது குர்ஆனின் வழிமுறைக்கு மாற்றம் செய்வதாகும்.

பொது ஜனங்கள்! எந்த ஒரு வலியையும், நபியையும் இறைவனின் அடியார்களாகவே பார்கின்றனர். இறைவனின் கட்டளைகளுக்கு முற்றிலும் தன்னை அர்பணித்தவர் களாகவே பார்கின்றார்கள். இறைவனின் அருள் வெளியாகும் ஸ்தலமாகவே உணர்கிறார்கள். இதற்கு மாறாக தனி கடவுளாகவோ, இறைவனாகவோ மனதால் கூட எண்ண மாட்டார்கள்.

## நபிகளாரின் ஆற்றல் :

கண்பார்வை அற்ற சஹாபி ஒருவர் யா ரஸூல்லாஹ்! என் கண்பார்வை கிடைக்க துஆ செய்யுங்கள் என மன்றாட தனது முபாரக்கான கரத்தால் தனது உமிழ்நீரை எடுத்து அந்த நபித்தோழரின் கண்ணில் தடவிய போது அந்த ஷணமே பார்வை பெற்றார்கள் என்பது புகாரியின் ஹதீஸாகும்.

இந்த சம்பவத்தில் அந்த நபித்தோழர் நபிகளாரின் சமூகத்திற்கு சென்று தன் தேவையை வேண்ட காரணம் அவர்கள் அல்லாஹ்வின் மிகவும் விருப்பத்திற்குரிய நபி-ரஸூல் என்பதை நன்கு உணர்ந்து இருந்தார். நபியவர்களை இறைவனின் அருள் வெளிப்படும் ஸ்தலமாக பார்த்தார்.

வழிகெட்ட வஹ்ஹாபியர்களைப் போல சாதாரண மனிதனாக பார்க்கவில்லை. நபியவர்கள் நிச்சயம் தனது தேவையை நிறைவேற்றுவார்கள் என உறுதியாக நம்பினார். வழிகேடர்களைப் போல அவநம்பிக்கை கொள்ளவில்லை. மனித கோலத்தில் இருந்தாலும் நபியவர்கள் இறைவனின் மிக சிறந்த தன்னிகரற்ற படைப்பு என்பதில் நபித் தோழர்பெருமக்கள் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தனர். சாதாரண மனிதனாக வாழ்ந்தாலும் எவராலும் புரிந்துகொள்ள முடியாத, இறைவனால் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடிய பேரொளியாக கண்டார்கள். இதனால் கண்பார்வையற்ற அந்த ஸஹாபியின், நபித்தோழரின் கோரிக்கை உடனே நிறைவேற்றித் தரப்பட்டது.

இங்கு நபியவர்கள் சுயமாக தன் ஆற்றலைக் கொண்டு தான் இந்த செயலை செய்தார்கள் என்று எந்த ஒரு முட்டாளும் கூட ஒப்புக்கொள்ள மாட்டான். அல்லாஹ் நபியவர்களுக்கு அந்த ஆற்றலை வழங்கியுள்ளான். அவர்களின் புனித உமிழ்நீரின் பரக்கத்தால் அந்த சக்தியை இறைவன் நிறைவேற்றினான் என்பதே உண்மை.

எல்லா சக்திகளும் இறைவனால் நமது கண்மணி நாயகம் அவர்களுக்கு பரிபூர்ணமாக வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்படாமல் இருந்தால் அப்படி ஒரு ஆற்றல் இருப்பதே உலகிற்கு தெரியாமல் போயிருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தியுங்கள்.

## வலிமார்களின் ஆற்றல் :

இதைப் போன்றே வலிமார்களின் மூலமாக வெளிப்படும் ஆற்றல், அதி அற்புத சக்தி என்பது இறைவன் தனது ஆற்றலை அந்த வலியின் மூலமாக வெளிப்படுத்துகிறான்.

ஈமான் கொள்ளாத எவரையும் முஃமின்கள் வலியாகவே ஒப்புக் கொள்ள மாட்டார்கள். எனவே இந்த குழப்பவாதிகள் கூறுவது போன்று வலிமார்களிடம் உதவி தேடுதல் என்பது குர்ஆனிற்கு மாற்றமான செயல் ஆகாது. மாறாக குர்ஆன் நமக்கு காட்டித் தரும் வழிமுறையாகும். அல்லாஹ்வே தனது திருமறையில் வலி-உதவியாளர்களை காட்டித்தந்த பிறகு அவர்களிடம் உதவி தேடாமல் இருப்பது முறைதானா? சிந்தியுங்கள்...! அவர்களிடம் உதவி தேட வேண்டும் என்பதே இறைவனின் விதித்த நியதி. இதை மறுத்து கூடாது எனக் கூறும் இந்த வழிகேடர்களைப் பற்றி நாம் என்ன சொல்வது. இறைவனின் நியதிக்கு மாறாக ஓர் நியதியை கற்றுத்தரும் இவர்கள் ஷைத்தானின் ஏஜெண்டுகள் என்பது இன்னுமா உங்களுக்கு புரியவில்லை.

வாசகர்களே! குர்ஆனின் விளக்கத்தைக் கொண்டே நாம் இதனை உங்களுக்கு விளக்கியுள்ளோம். இதற்கு மேலும் வலிமார்களிடம் உதவி தேடுதலை மறுப்பவனைப் பற்றி நீங்கள் தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிடிவாதம் பேசுவோர் எத்தனை ஆதாரங்களையும் புறந்தள்ளி விடுவார்கள். இறைவனால் சபிக்கப்பட்டவர்களைப் பற்றி நமக்கு கவலையில்லை. இவர்களின் தவறான பாதையில் நீங்கள் செல்லக் கூடாது என்பதற்காகத்தான் இத்தகைய முயற்சி. அல்லாஹ் நமது நபியின் பொருட்டால் உண்மையான நபி நேசத்தை நம் இதயங்களில் எற்றி பிரகாசிக்க செய்வானாக. ஆமீன்.

இனி அந்த பகுதியில் நாம் குர்ஆனின் தர்ஜுமா செய்வதற்குரிய சட்ட திட்டங்களை சில முக்கியமான குர்ஆன் மஸ்அலாக்களை குர்ஆனின் சில முக்கியமான பழக்க பாஷைகளை விளக்க போகிறோம்.

இன்னும் அனைத்திற்கும் குர்ஆனிலிருந்தே விளக்கத்தை கூறுவோம். சில விஷயங்களை உறுதி செய்ய ஹதீஸ்களையும் முன் வைப்போம். அப்படி ஹதீஸ்களைக் கொண்டு வந்தால் அதையும் திருமறையின் பார்வையில் பார்க்கப்படும்.

**இன்ஷா அல்லாஹ் தெளிவடைவோம்.....**

## வாசகர் மன்றம்.....

### கல்புக்கு ராஹத்து...

அஸ்ஸலாமு அலைக்கும்.......

இப்பவும் தங்கள் வெளியீடு தர்கா என்னும் இதழ் படித்தேன். அதில் அரிய பல வலிமார்களின் சரிதை, கராமத், வலிமார்களின் வாழ்வில், வழியில் என இறைநேசச்செல்வர்கள் சொற்பொழிவு என ஏராளமான செய்திகள் அடங்கிய (புத்தகம்) புதையல் படித்தேன் கல்புக்கு மிகவும் ராஹத்தாக இருக்கின்றது. அகில உலகம் படைத்து பரிபாலிக்கின்ற அல்லாஹ் ஒருவனுக்கே புகழ் அனைத்தும்.

ஆசிரியர் சையத் அஹமத் அவர்களே.... எனக்கு ஓர் உதவி செய்யுங்கள் ; தர்கா எனும் இதழ் எனக்கு 5 வருட, 10 வருட சந்தாவில் அனுப்புவீர்களா? எவ்வளவு பணம் அனுப்புவது? எம்.ஓ., டி.டி., ஆன்லைன் என எதில் அனுப்புவது? விவரம் தெரிவிக்கவும். எனது மூன்று நண்பர்களுக்கும் நான் தெரிவித்துள்ளேன். அவர்களும் கேட்டு உள்ளார்கள். நீங்கள் அனுப்பும் விவரம் கடிதம் எதில் அனுப்பினாலும் சரி. முஹர்ரம் மாத இதழில் இருந்து அனுப்பவும். நிச்சயம் தாங்கள் அனுப்புவீர்கள் என இன்ஷா அல்லாஹ் எதிர்பார்க்கிறேன். தங்கள் துவாவும் வேண்டும் தர்கா இதழும் வேண்டும்.

வஸ்ஸலாம்! இப்படிக்கு,

**B.NOWSHEEN, PERUNDURAI. 22.03.2010**

### ஜன்த்ரியில் சேர்த்துக் கொள்ளுங்கள்...

அன்புடையீர்!

அஸ்ஸலாமு அலைக்கும்... தங்களின் தர்கா ஜன்த்ரி 1431 - 2010 என்ற புத்தகம் கண்டேன் அதில் 45வது பக்கம் ரஜப் மாதம் பற்றிய வலிமார்கள் விபரத்தில் எனது சிறிய தந்தை பாவா முஹம்மது இபுறாஹீம் குரைஷி வலியுல்லாஹ் அவர்கள் பொதக்குடியில் அடங்கி இருக்கிறார்கள். அவர்கள் பற்றிய தகவல் விடுபட்டுள்ளது. அவர்கள் ரஜப் பிறை 6ல் வபாத்தானார்கள். அத்திக்கடை அருகில் பொதக்குடியில் அவர்கள் வாழ்ந்துவந்த ஆசிரமத்திலேயே அவர்கள் நல்லடக்கமாகி அங்கு அழகிய தர்கா சகல வசதிகளுடன் கட்டப்பட்டு அநேக மக்கள் ஜியாரத் செய்து வருகிறார்கள். நான் தான் அவர்கள் வாரீசாக ஆண்டு தோறும் போய் உருஸ் விழா நடத்தி சந்தனம் பூசி வருகிறேன். கந்தூரி சாதம் வினியோகம் தஞ்சாவூர் ஓரியண்டல் டவர் ஒட்டல் உரிமையாளர்கள் மேற்பார்வையில் விமரிசையாக நடைபெற்று வருகிறது. இந்த உருஸ் தினத்தை தங்கள் ஜன்த்ரி புத்தகத்தில் இனி வரும் பதிப்புகளில் இடம் பெறச் செய்து வலியுல்லாஹ் அவர்களின் முஹப்பத்தைப் பெற்றுக்கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல திண்டுக்கல் அருகே கோவிலூர் என்ற கிராமத்தில் மகான் கொழும்பு ஆலிம் வலியுல்லாஹ் அடங்கியுள்ளார்கள். அவர்களும் அதே ரஜப் பிறை 6ல் தான் வபாத் ஆனார்கள். என்பது மிக முக்கிய தகவல். தர்கா ஜன்த்ரியில் இந்த உருஸ் தினத்தையும் பிரசுரிக்கவும்.

நான் தாங்கள் வெளியிடும் தர்கா இதழ்களைப் படித்து வருகிறேன். மிக நல்ல அரிய பல தகவல்களை அதில் வெளியிடுகிறீர்கள். பாராட்டுகிறேன். தங்கள் முயற்சி தொடர எனது வாழ்த்துக்கள். **ஹாஜி அ.அன்வர்தீன்**

***ராமநாதபுரம்.30.03.2010***

### கரையும் காகம் இல்லை! பிரசவ வேதனை இல்லை...!

பிஸ்மில்லாஹ்.அஸ்ஸலாமு அலைக்கும்!

தர்கா இதழில் அம்ரூஹாவில் அடங்கப்பட்டிருக்கும் செய்யிதினா ஷர்ஃபுத்தீன் வலியுல்லாஹ் அவர்களின் ஜியாரத்தில் தேள் கொட்டுவதில்லை என்ற செய்தியை எனக்கு நன்கு அறிமுகமான ஹஜ்ரத்திடம் தர்கா இதழைக் காட்டி படிக்கச் சொன்னேன். அவர்கள் அதை படித்து விட்டு இன்னும் ஒரு வலியுல்லாஹ்வுடைய சம்பவத்தை சொன்னார்கள்.

அதாவது அந்தர் தீவை சார்ந்த தாஜுத்தீன் தங்கள் என்பார்கள். ஹஜ்ரத் அவர்களுக்கு நீண்ட நாள் பழக்கம் உடையவர்கள் அவர்களின் பாட்டனார் செய்யிதினா முஹம்மது காஸிம் வலியுல்லாஹ் என்பவர்கள் கவரத்தீ என்ற ஊரில் அடக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஜியாரத்தில் பல கராமத்துக்களை செய்துகொண்டிருக்கிறார்கள். அதில் ஒன்று...

ஒருமுறை அந்த ஊரின் தெருவில் நடந்து செல்லும்பொழுது ஒரு வீட்டில், பிரவச நேரம் வந்து அந்த பெண்ணுடைய சத்தம் வெளியில் கேட்டது. அதைக் கேட்ட வலியுல்லாஹ் அவர்கள் இது என்ன சத்தம் என்று கேட்க இது பிரசவ வேதனை சத்தம் என்று சொன்னார்கள். அதற்கு வலியுல்லாஹ் அவர்கள் இதெல்லாம் இங்கு கூடாது என்று சொன்னார்கள். அன்று முதல் இன்று வரை பிரசவ நேரம் அங்கு இருக்கும் பெண்ணிற்கு பிரசவ வேதனை வருவதில்லை.

இன்னொரு நல்ல சம்பவம் உண்டு ஒருமுறை அவர்கள் ஒளூ செய்ய சென்றார்கள். அப்போது தங்களுடைய தலை பாகையை கழற்றி ஒரு இடத்தில் வைத்துவிட்டு ஒளூ செய்தார்கள். வந்து பார்க்கும் போது அவர்களின் தலை பாகையில் காகம் அசுத்தம் செய்திருந்தது. அப்போது அவர்கள் தன்னுடன் இருந்தவர்களிடம் இது என்னப்பா? என்று கேட்டார்கள். அதற்கு காகம் நஜிஸைப் போட்டு விட்டது என்று சொன்னார்கள். அதைக் கேட்ட வலியுல்லாஹ் அவர்கள் இது இங்கு இருக்கக் கூடாதுப்பா என்று சொன்னார்கள். அன்று முதல் இன்று வரை அங்கு காகம் இருப்பதில்லை. (வருவதில்லை)

தாஜுத்தீன் தங்கள் என்பார் கௌதுல் ஆஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் திருப்பேரர் என்பது குறிப்பிடத்தக்கது. வஸ்ஸலாம்!

**S.T.MAHMOODH,KUMBAKONAM**

*01.04.2010*

### தப்லீகின் வஹ்ஹாபிய முகத்திரை கிழியட்டும்...!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹ்...

ஜனாப் ஆசிரியர் சாஹெப் அவர்களுக்கு காட்டு மன்னார்குடி G.S.S.கலீமுல்லாஹ் சலாத்துடன் எழுதிக்கொண்டது. இப்பவும் சாஹெப் தர்கா இதழ் என்ற இஸ்லாமிய இறை ஞான இதழுக்கு அரசு அங்கீகாரம் முறைப்படிபெற்று சுன்னத் ஜமாஅத்தின் கொள்கைகளை உலகறிய செய்ய எவ்வளவு கஷ்டப்பட்டு இதழ்களை தயாரித்து அனுப்பி வருகிறீர்கள். வாழ்த்துக்கள்!

தர்கா இதழுக்கான சந்தா ரூ.50/-ஐ எனக்கும் என் அண்ணார் ஹாஜி S.சையத் ஹபீபுல்லாஹ் சாஹிப்- திருச்சி. அவர்களுக்கும் சந்தா ரூ.50/-ஐயும் இன்று தங்களுக்கு M.O செய்துள்ளேன். பெற்றுக்கொண்டு தர்கா இதழ்களை தொடர்ந்து அனுப்பிவைக்கவும். மறவாமல் எங்களுக்கு ஜன்திரி புத்தகத்தையும் அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகளை, கோட்பாடுகளை, இலட்சியங்களை, அவுலியா அன்பியாக்களின் வரலாற்று சிறப்புகளை உலகிற்கு உணர்த்தி வஹ்ஹாபிய - தப்லீகர்களின் முகத்திரையை கிழித்து சுன்னத் வல் ஜமாஅத்தினரின் நெறிகளை தர்கா மூலம் பரப்பிடவும், தங்களின் தீன் பணி தொடர வல்ல நாயனை வேண்டி துஆ செய்கிறோம். வஸ்ஸலாம்...!

**G.S.S.கலீமுல்லாஹ்,**

***காட்டுமன்னார் கோயில்.06.04.2010***

### தரம்மிகு தர்கா இதழ்...

யா கரீம்!

நாயன் நற்கிருபை செய்வானாகவும்!

அன்புடையீர் - அஸ்ஸலாமு அலைக்கும் - நலம், நலமறிய அவா - தங்களின் தன்னிகரற்ற தரணி போற்றும்...

தொடர்ச்சி 17 ஆம் பக்கம் காண்க...

கௌரவ ஆலோசகர் :
**சையத் மத்தீன் அஹமத் சக்காப், B.E.,**

நிருபர்கள் :
**உஸ்மான் சேட் B.Com.,**
**சையத் அப்துல் காதர், M.S., (I.T)**
**ஹாபிஸ் ருஸ்தும் அலி (உருது)**
**நிஸார் அஹ்மத் B.E., பாஜில் அஹமத் கான்**

துபாய் நிருபர்கள் :
**ஷேக் இஸ்மாயில் M.B.A.,**
**பாரிஸ் அஹ்மத் கான்**